
திருவாரூர்

அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்

(சர்வதோஷ பரிகாரத்தலம்)

திருக்கோயில் தலவரலாறும், அதன் சிறப்புகளும்.






அருள்மிகு ரி(ரு)ணகரேஸ்வரர்



அருள்மிகு ரௌத்ர (ராகு கால) துர்க்கை

திருவாரூர் வருக !　　　　　　　　திருவருள் பெறுக !!



அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்

தலவரலாறும், அதன் சிறப்புகளும்

❖

☎ (04366) 242343
website : WWW. thiyagarajaswamytemple.org
Email : thiyagarajaswamytemple@gmail.com
e-pooja : tntemple.org.

❖

ஆசிரியர் :
குடவாயில். பாலசுப்பிரமணியன்

❖

வெளியீடு :
அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில்,
திருவாரூர்.

விலை ரூ. 25/-

அணிந்துரை :

ச. இளங்கோ, B.A.B.L.,
இணை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, தஞ்சாவூர்.

திருவாரூர் திருக்கோயில் என்ற பெயரில் திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் பற்றிய முழுமையான செய்திகளைத் தரும் வகையில் குடவாயில் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் இயற்றியளித்துள்ளார்கள். புராணங்கள் கல்வெட்டுகள் மற்றும் செப்பேடு ஆகியவற்றின் துணையோடு ஆதாரபூர்வமான செய்திகளை வருங்காலச் சந்ததியினர்க்கும் உதவும் வகையில் தந்துள்ள ஆசிரியரை எவ்வளவு போற்றினும் தகும். தேவாரப் பாடல்கள், பெரியபுராணம் இவை ஆதார மேற்கோள்களாக எடுத்தாளப் பெற்றுள்ளன.

திருவாரூர்த் திருக்கோயிலுக்குப் பல்லாண்டுகளாக வந்து வழிபடும் சைவச் சான்றோர்களும் அறிந்திராத பல செய்திகள் நூலில் தொட்ட இடமெல்லாம் நிறைந்துள்ளன. கட்டிடக் கலைகுறித்த பல்வேறு செய்திகள் இடம்பெற்றுள்ளன. திருக்கோயிலில் காணப்பெறும் ஓவியங்கள் குறித்த வரலாற்று உண்மைகள் தெளிவாக எடுத்துக்கூறப்பெற்றுள்ளன. இவையாவும் திருக்கோயில் குறித்த வரலாற்று உண்மைகளை அறிய உதவுவன.

பழம்பெருமை வாய்ந்த திருக்கோயில்கள் பற்பல, எனினும் அவற்றுள் திருவாரூர்த் திருக்கோயில் தலையாய சிறப்புகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டிலங்கும் திருக்கோயில் ஆகும்.

சிறப்புகளைத் தொகுத்துத் தந்து, வரலாற்று உண்மைகளை எடுத்தியம்பி, திருக்கோயிலின் இருப்புக்கணக்கைக் காட்டுவதுபோல் இருப்பு பதிவேடு (Stock Register) ஒன்றை நமக்களித்து, செயற்கரிய செயலை - இந்நூலை வழங்கியதன் மூலம் செய்து பெரியவதாகத் திகழும் குடவாயில் பாலசுப்பிரமணியனார் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் திருக்கோயிலுக்கும் அருந்தொண்டு ஆற்றியுள்ளார்.

இதுபோல் இன்னும் பல நூல்களை அவரிடமிருந்து தமிழகம் எதிர்பார்க்கிறது. வழங்கி வாழ்க என்று திருவாரூர்ப் பெருமான் திருவடி வணங்கி இறைஞ்சுகிறேன்.

அன்புடன்,

ச. இளங்கோ, பி.ஏ.பி.எல்.,

34-1

உ

சிவமயம்

முன்னுரை

பேரன்புடையீர் !

"தென்னாடுடைய சிவனே போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி !

-என நாவுக்கரசரால் சிறப்பிக்கப்பெற்றது.

போற்றப்படும் பரம்பொருள். அருள்மிகு தியாகேசப் பெருமான் ஆவார்.

தென்னகத்தில் தேர் என்றால் அது ஆரூர்த் தேரைத் தான் குறிக்கும்.

"ஆழித்தேர் வித்தகனை யான்கண்ட ஆரூரே"

-என நாவுக்கரசரால் சிறப்பிக்கப்பெற்றது.

சைவ சமய மரபில் 'பெரியகோயில்' என்றும் 'பூங்கோயில்' எனவும் வழங்கப்படுகிறது. தேவாசிரியம் எனும் திருக்காவணத்தில் (ஆயிரங்கால் மண்டபம்) சைவ சமயச் சான்றோர்கள் கூடி எடுக்கும் முடிவு உலகெங்குமுள்ள சைவ சமயத்தினரையும், கட்டுப்படுத்தும் என்பதால் இது சைவசமயத்தின் தலைமைப் பீடமாகவும் திகழ்கிறது.

இங்குள்ள மூலவர் 'வன்மீகநாதர்' என வடமொழியிலும், 'புற்றிடங்கொண்டபெருமான்' எனத் தமிழ் மொழியிலும் அழைக்கப்படு கின்றார். இத்திருத்தலம் சைவத்தலங்களில் முதன்மை யானதாகவும், சப்தவிடங்கத்தலங்களில் மூலாதாரத்தலமாகவும், பஞ்சபூத தலங்களில் பிருதிவி (பூமி) த்தலமாகவும் விளங்குகிறது.

இத்திருக்கோயிலில் மூலவர் எப்பொழுது தோன்றினார் என்பது காலக்கணக்கிற்குள் அகப்படாதது. இதனை திருநாவுக்கரசர் :-

திருவினாள் ஓர்பாகம் சேர்வதற்கு முன்னோ ! பின்னோ !
தில்லை அம்பலத்தாடுவான் புகுவதற்கு முன்னோ ! பின்னோ !
திசை எட்டும் தெரிப்பதற்கு முன்னோ ! பின்னோ !
திருவாரூர்க் கோயிலாக கொண்ட நாளே !

- என வியந்து பாடியுள்ளார்.

ஆலயத்தில் உள்ளே அமைந்துள்ள முக்கிய புறக்கோயில்கள்.

1. அருள்மிகு அசலேஸ்வரர் (இது தனியாக பாடல் பெற்ற ஸ்தலம்)
2. அருள்மிகு கமலாம்பாள்
3. அருள்மிகு நீலோத்பலாம்பாள்
4. அருள்மிகு ராகுகால ரௌத்திர துர்க்கை
5. அருள்மிகு ரு(ரி) ணவிமோசனர்
6. அருள்மிகு விஸ்வகர்மேஸ்வரர்
7. அருள்மிகு தெட்சிணாமூர்த்தி சுவாமி
8. அருள்மிகு ஆனந்தீஸ்வரர் கோயில்
9. அருள்மிகு சித்திஸ்வரர் கோயில்
10. அருள்மிகு ஹயக்ரீஸ்வரர் கோயில்
11. அருள்மிகு தட்சனேஸ்வரர் கோயில்
12. அருள்மிகு அண்ணாமலேஸ்வரர் கோயில்
13. அருள்மிகு வருணேஸ்வரர்
14. அருள்மிகு ஓட்டு தியாகேசர்
15. அருள்மிகு துளசிராஜா பூஜித்த கோயில்
16. அருள்மிகு தேவேந்திரன் பூஜித்தலிங்கம்
17. அருள்மிகு சேரநாதர்
18 அருள்மிகு பாண்டியநாதர்
19. அருள்மிகு ஆடகேஸ்வரம்
20. அருள்மிகு புலஸ்தியரட்சேஸ்வரர் கோயில்
21. அருள்மிகு புலஸ்திய பிர்ம்மேஸ்வரர் கோயில்
22. அருள்மிகு பக்தேஸ்வரர் கோயில்
23. அருள்மிகு வில்வாதீஸ்வரர் கோயில்
24. அருள்மிகு பாதாளேஸ்வரர்

அருள்மிகு கமலாம்பாள் திருக்கோயில் (ஞானசக்தி பீடம்) :

இத்திருக்கோயிலில் மூன்றாவது பிரகாரத்தில் வடமேற்குத் திசையில் ஈசான்யத்தை நோக்கி அமைந்துள்ளது, அருள்மிகு கமலாம்பிகை திருக்கோயில் ஆகும். இங்கு எழுந்துள்ள அம்பிகை சிரசில் சர்வேஸ்வரனைப் போன்று கங்கையையும், பிறையையும் சூடிக்கொண்டு யோக வடிவில் அமர்ந்திருக்கின்றாள். இவள் மூன்று தேவியரின் சங்கமம் க-கலைமகள், ம-மலைமகள், ல-அலைமகள், ஆதலால் புனித பாரத தேசத்தில் புகழ்பெற்ற 64 சக்தி பீடங்களுள் அன்னை ஆட்சிபுரியும் ஐந்து பீடங்களில் முதன்மையானதாகவும் (காசி-விசாலாட்சி, காஞ்சி-காமாட்சி, மதுரை-மீனாட்சி, ஆரூர்-கமலாலயதாட்சி, நாகை-நீலாயதாட்சி)ஆகிய ஐந்து தலங்களில் சக்தி பீடமாகவும் சிவசக்தி சொரூபிணியாகவும் அருள்மிகு கமலாம்பாள் திகழ்கிறாள்.

மூன்று தேவியரும் ஒன்றாய் நிற்கும் அன்னையை துர்வாச முனிவர் வழிபட்டுள்ளார். அன்னை வலது கரத்தில் மலரினை ஏந்தியும், இடது கரத்தினை இடையில் இருத்தியும், கால்களை யோகாசன நிலையில் அமைத்து மகாராணியைப் போல் காட்சியளிக்கிறாள்

இவளின் அருளை வியந்து திருவாரூர் பிறந்த இசை மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமி தீட்சிதர்"நவாவர்ண கீர்த்தனை" பாடியுள்ளார்.

அன்னையின்தவத்தினால்தான்வன்மீகநாதரே(புற்றிடங்கொண்ட பெருமான்) இத்தலத்திற்கு எழுந்தருளினார் என்பர். இத்திருத்தலத்தில் அருள்மிகு கமலாம்பாள் திருக்கோயில் தனிக்கொடிமரம், தனித்திருமதில் கொண்டு தனிக்கோயிலாக உள்ளது மிகவும் சிறப்புடையதாகும்.

ஆடிப்பூரவிழா அம்பாளுக்கு மிகுந்த சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆடி வெள்ளி, தை வெள்ளிக்கிழமைகளும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

54 நாட்கள் 17 முறை ஒன்றிய மனதுடன் அன்னையை வலம் வந்தால் வேண்டியவர்க்கு வேண்டுவனவற்றைத் தந்து அருள்பாலிப்பாள் அன்னை கமலாம்பிகை.

கல்வியு ஞானமும் பல்வகைப் போகமுங்
கட்டழகுஞ்
செல்வமு மின்பமு நன்மனையாளுந்
திறலரசு
நல்லன மைந்தருஞ் சித்தியு மத்தியு
நாடியுனைப்
பல்வகைப் பத்தி புரிவோர்க் கருளும்
பராசக்தியே

மோனத் தவமிருக்கும் "ஞானச் செல்வி" சக்தி பீடங்களுள் "ஞானசக்தி " பீடமாகப் போற்றப்படுவது. அதனால் "அட்சரங்களையே" (உயிரெழுத்துகள்) பீடமாக வலப்புறமும், சரசுவதியை இடப்புறமாகவும் கொண்டுவிளங்குகிறார், அருள்மிகு கமலாம்பாள். எனவேதான் ஸ்ரீவித்தையின் அம்சமான உச்சிஷ்ட கணபதியும் இந்தச் சந்நதியில் எழுந்தருளியுள்ளார். சரசுவதியின் குருவான ஹயகிரீசுவரரால் பூஜிக்கப்பட்டது. இத்திருத்தலம். சிவசக்தி சொரூபிணியான ஸ்ரீ கமலாம்பாள் லலிதா சகஸ்ரநாமத்தின் வடிவமாக விளங்குகிறார். எனவே தான் சகல கலைகளையும், கல்வியையும் வேண்டி ஸ்ரீ கமலாம்பாள் மீது கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசுவாமி தீட்சிதர் நவாவர்ண கீர்த்தனையை பாடினார்.

ஞானமேவடிவாக விளங்கும் அன்னை கமலாம்பாள் கல்வியையும் கலைகளையும் தரவேண்டி ஞானதீபம் ஏற்றுவோம். அட்சரதீப அர்ச்சனை செய்வோம் அது நம்முள்ளும், நம் குழந்தைகளுக்குள்ளும் ஞானவேள்வியை தூண்டும் தீபமாக அமையும்.

அருள்மிகு அல்லியங்கோதை (நீலோத்பலாம்பாள்)

இதுவும் திருக்கோயிலுக்குள் அமைந்த தனிக்கோயிலாகும். இங்கே அம்பாள் இரண்டு கரத்துடன் ஆதிசக்தியாக காட்சி தருகிறார். பெயர் :அல்லியங்கோதை, வடமொழியில் நீலோத்பலாம்பாள் என்பர். வேறு எங்கும் காண இயலாத தனிச்சிறப்புடன் அம்பாள் காணப்படுகிறாள். அம்பாளுக்கு அருகில் ஒரு தோழி நிற்கிறார். அவர் தோளில் முருகப்பெருமான் அமர்ந்துள்ளார். தோழியின் தோளில் அமர்ந்துள்ள முருகப்பெருமானின் தலையைத் தொட்டுத் தடவிக் கொடுப்பதுபோல் திருமேனி அமைந்துள்ளது. இவ்வாறான திருவுருவம் வேறு எங்கும் காண இயலாதது. கருவறையில் பள்ளியறையும் அமைந்து தனித்தன்மை பெற்று விளங்குகிறது.

அருள்மிகு ரௌத்திர துர்க்கை அம்பாள் (எரிசினக்கொற்றவை)

அருள்மிகு ரௌத்ர துர்க்கை அம்பாள் திருமண வயதை எட்டிய குமரிப் பெண்களுக்கும், ஆண்களுக்கும் நெடுநாட்களாக திருமணத் தடையை நிவர்த்தி செய்யவே ராகு கால நேரத்தில் தன்னை அர்ச்சனை செய்வோருக்கு குறை தீர்த்து அருள் பாலிக்கின்றாள்.

திருவாரூர் ஆலயத்தில் எட்டு துர்க்கை ஸ்தலம் உள்ளது. அதில் முதல் பிரகாரத்தில் மஹிஷாசுரமர்த்தினி பிரதான துர்க்கையாகவும், அதற்கு அங்கமாக முதல் பிரகாரத்தில் மூன்றும், இரண்டாம் பிரகாரத்தில் நான்கும், கமலாம்பாள் சன்னதியில் ஒன்றும் சேர்த்து ஆக 8 துர்க்கையாக உள்ளது. (அஷ்டதுர்க்கை என பெயர்) சாரதா நவராத்திரியில் இவர்களுக்கு விசேஷ பூஜையுண்டு. தியாகராஜ ஆலயத்தில் தெற்கு பிரகாரத்தில் தனிகோயிலாக உள்ளது. ரௌத்ர துர்க்கை இந்த சன்னதியில் ராகுகாலத்தில் அர்ச்சனை செய்பவர்களுக்கு நினைத்த காரியங்கள் முடித்து அருள்பாலிக்கிறாள் அம்பிகை.

பெயர் காரணம் ருத்ராம்சம் அதிகமாக உள்ளது என்று அர்த்தம், தோளில் சூலம் இருப்பதால் ரவுத்ர துர்க்கையென சொல்லப்படுகிறது. பொதுவாக ஜோஸ்ய ரீதியில் ராகுவிற்கு அதிதேவதை பத்ரகாளி துர்க்கை என்று சக்திகள் சொல்லலாம். ராகு தோஷங்களினால்தான் ஆண், பெண், விவாகங்கள் தடைபடுகின்றது. பாக்கி தேவதைகளுக்கு உள்ளது போல் தனிக்கிழமைகள் இல்லாததால் ராகு கேதுவிற்கு நாட்களில் நேரத்தை பிரித்துள்ளார்கள். அந்த வேளைகளில் துர்க்கைக்கு அர்ச்சனை ஆராதனை செய்வதால் காரியம் சித்தி அடைகின்றது. தோஷங்கள் விலகுகிறது. பொதுவாக வெள்ளி, செவ்வாய, ஞாயிறு கிழமைகளில் இந்த சன்னதியில் பிரார்த்தனை ஆராதனைகள் நிறைய நடக்கின்றன, தமிழில் அம்பாளுக்கு "எரிசினக்கொற்றவை" எனப் பெயர் வழங்கி வருகின்றது.

இவளின் சிறப்பையும், ஆற்றலையும் சம்பந்த முனிவர் திருவாரூர்ப் புராணம் என்ற நூலில்

"மாயவன் தனக்கு முன்னம் மணிமுடியளித்த ஆரூர்

தூயனை வணங்கி ஆங்கு துர்க்கையை விதியினால்தாபித்து
ஆய்மலர் தூவி அன்பால் அர்ச்சனை புரியின் மன்ன
நீ உளந்தனில் இன்று நினைந்தது முடியும் என்றான்"

– திருவாரூர்ப் புராணம்

என போற்றியுள்ளார். இதனால் தியாகேசருடன் இங்குள்ள துர்கையை வழிபட்டால் தடைபட்ட திருமணம், அரசு பதவி முதல் அரசியல் பதவி வரை எண்ணியது எண்ணியவாறு நிறைவேறும். ஆடி மாதம் ராகுபெயர்ச்சி மற்றும் ஆடிவெள்ளிக்கு லட்சார்ச்சனை நடைபெறுகிறது. ராகுபகவானின் அதிதேவதையான ராகுகாலதுர்க்கை அம்மனை லட்சார்ச்சனை செ ய்து வழிபட்டால் ராகு தோஷ நிவர்த்தி பெறும்.

நவக்கிரகச் சிறப்புகள் :

இத்திருத்தலத்தில் அமைந்துள்ள நவக்கிரகங்கள் பக்தர்களின் குறை தீர்த்தருளும் வண்ணம் உள்ளது. ஒன்பது கிரகங்களும் தியாகராஜ சுவாமிக்கு கட்டுப்பட்டு தங்களின் வக்கிரங்களைக் குறைத்துக் கொண்டு ஒரே வரிசையில் தென் திசையிலுள்ள தியாகராஜசுவாமி நோக்கி அமைந்துள்ளது. மேலும் இங்குள்ள நவக்கிரகங்கள் வடமேற்கு மூலையில் அமைந்துள்ளதாலும் சிறப்புப் பெறுகின்றது. இதனால் கிரகங்களின் வக்கிரங்களால் பாதிக்கப்படும் பக்தர்கள் திருவிளக்கிட்டு இங்கே வேண்டிக் கொண்டு அருள் பெறுகின்றனர்.

இத்திருக்கோயில் சிவ ஆலயங்களின் மூலதாரஸ்தலமாக திகழ்கிறது. இங்குள்ள நவக்கிரகங்கள் சிவலிங்கத்தை அடுத்து வரிசையாக அமைந்திருப்பது மற்ற சிவலாலயங்களைக் காட்டிலும் தனிச்சிறப்பாகும். நவக்கிரகங்கள் அனைத்தும் தியாகராஜசுவாமிக்கு கட்டுபட்டது. ஆதலால் இங்குள்ள நவக்கிரகங்கள் அனுக்கிரக நவக்கிரகங்கள் ஆகும். ஆகையால் பக்தர்கள் பலரும் வழிபட்டு நற்பயனை அடைகிறார்கள்.

அருள்மிகு ரு(ரி)ண விமோசனர் :

இந்த ருணவிமோசனரை 11 ஞாயிற்றுக்கிழமை திங்கள்கிழமை அல்லது வெள்ளிக்கிழமைகளில் அர்ச்சனை, அபிஷேகம் செய்து வழிபடவேண்டும். ஒவ்வொரு மாதமும் அமாவசை தினத்தில் சுவாமிக்கு சிறப்பு பால் அபிஷேகம் செய்தும் வழிபடலாம்.

தெற்கு திசை நோக்கி அருள்பாலிக்கும் அருள்மிகு ரு (ரி) ணவிமோசனர் பெருமான் தன்னை வேண்டி அமாவாசை தினத்தன்று அபிஷேகம், உப்பு,மிளகு காணிக்கை செய்யும் பக்தர்களுக்கு தங்களுடைய தீராத நோய்களையும், தங்களுடைய நெடுநாள் தீராத, வராத கடன் தொல்லைகளையும் தீர்த்து வைக்கிறார். இதில் என்ன ஆச்சரியம் என்றால் உப்பு காணிக்கையினால் பிரகார்ம் சற்றே அரித்து இருந்தாலும் பெருமானுக்கு எந்தவித பாதிப்பும் இல்லாத திவ்வியலிங்கமாக -ரி(ரு) ண விமோசனர் விளங்குகிறார்.

அருள்மிகு விஸ்வகர்மேஸ்வரம்

இத்திருக்கோயிலின் இரண்டாம் பிரகாரத்தின் வடபுறம் அமைந்துள்ளது இவ்வாலயமாகும். விஸ்வகர்மா வழிபட்ட சிவலிங்கம் இங்குள்ளது. மனைமுகூர்த்தம் செய்பவர்கள் அதற்கு பயன்படுத்தும் செங்கல்லினை ஒற்றைபடை எண் கணக்கில் இத்திருக்கோயில் இறைவன் முன்வைத்து அர்ச்சனை செய்தபின்னரே அதனை பயன்படுத்துகின்றனர். எந்த லக்னமும் இல்லாமல் கட்டிடம் அமைக்க லட்சுமி கடாட்சம் நிறைந்து வளமோடு வாழ விஸ்வகர்மாவின்பரிபூர்ண அருளை பெற இதுவே நல்வழி என பெரிதுமட் நம்பி வழிபட்டு பலன் பெறுகின்றனர்.

அருள்மிகு சகஸ்திரலிங்கம்

இந்த லிங்கத் திருமேனியின் பாணத்தில் ஆயிரம் சிவலிங்க உருவங்கள் அமைந்துள்ளன. இதனாலேயே சகஸ்திரலிங்கம் எனும் பேர் கொண்டுள்ளது. வடமொழியில் சகஸ்ரம் என்றால் ஆயிரம் என்று பொருள்

அகத்திய முனிவர் மந்திர உச்சாடனம் செய்து நிறுவிய லிங்கத்திருமேனி என்பது இதன் பெருஞ்சிறப்பாகும். இதன் ஆற்றல் கொண்டே அகத்தியர் கடல் முழுவதும் வற்றுமாறு அருந்தினார் என்று புராணங்கள் கூறுகின்றன.

அருள்மிகு சண்டிகேஸ்வரர் இருவர்

எல்லாத்தலங்களிலும் ஒரு சண்டிகேஸ்வரர் மட்டுமே இருப்பார். ஆனால் திருவாரூர்க் கோயிலின் வடக்குத் திருச்சுற்றில் இரண்டு சண்டிகேசர்களைக் கண்டு இன்புறலாம்.

எமனே இங்கு சண்டிகேசராக மாற்றியுள்ளார். தாடி சடையுடன் எமன்ஒருகாலை ஊன்றி முழங்காலில் முகத்ததை வைத்துக் கொண்டுள்ளார். இவரே எமசண்டேசுரர். திருவாரூரில் பிறர்தவர்கள் எல்லோரும் சிவகணங்கள் ஆதலில் எமனுக்கு இங்கே வேலை இல்லை ஆகவே தனக்கு வேலை இல்லையே என்று பெருமானிடம் முறையிட பெருமானை வணங்குவதால் உண்டாகும் பயனை வழங்கும் சண்டேசப் பதவியைத் தந்தருளினார்.இவரே எமசண்டேசர் இரண்டாவதாக எல்லாத் தலங்களிலும் உள்ள சண்டேஸ்வரர் இங்கும் உள்ளார் இவர் உலா வந்து காட்சிவழங்கும் சண்டேசுரர் ஆவார் இவரே ஆதிசண்டேசுரர் எம சண்டேசுரர்என இரு சண்டேசுரர்கள் இருப்பது தனிச்சிறப்பு திருவாரூரில் பிறந்தவர்களிடம் எமன் வரமாட்டார். முக்திப்பேறு தந்து இறைவனே அழைத்துக்கொள்வார் என்பதை உறுதிப்படுத்தும் சான்றாக எமசண்டேசுரர் இருக்கிறார்.

அருள்மிகு வாதாபி விநாயகர்

திருக்கோயிலின் முதல் திருச்சுற்றில் அமைந்துள்ளது வாதாபி விநாயகர் இதன் சிற்ப அமைப்பை வேறு இடத்தில் காண இயலாத தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். பெரியபுராணத்தில் தன் மகனையே பெருமானுக்காக அரிந்து கறி சமைத்து பெருந்தொண்டராகக் காட்டப்பெறும் சிறுதொண்டநாயனார் பரஞ்சோதி என்ற பெயரில் பல்லவ மன்னனாகிய

நரசிம்மனிடம் தளபதியாகப் பணிபுரிந்தார் மேலைச் சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியைப் பரஞ்சோதி வென்றார் தலைநகர் வாதாபியைக் கைப்பற்றினார் அப்போது வெற்றியின் அடையாளமாக வாதாபியிலிருந்து விநாயகப் பெருமானைக் கொண்டு வந்தார். அவ்வாறு கொண்டு வந்த விநாயகரைத் திருவாரூர்த் திருக்கோயிலில் வைத்தார் அத்திருமேனியே இன்று வாதாபி கணபதியாக இருந்து அருள்பாலிக்கிறார் இந்த விநாயகர்திருமுன் நின்று முத்துசுவாமி தீட்சிதர் பாடிய பாடலே வாதாபி கணபதிம் எனத் தொடாங்கும் பாடல்

சாளுக்கிய கலை நெறியைக் கொண்டுள்ள இந்த விநாயகர் போன்ற உருவம் சோழநாட்டில் வேறு எங்கும் இல்லை

அருள்மிகு வீதி விடங்க விநாயகர்

கிழக்கு கோபுர வாயிலின் உள்ளே எதிர்புறம் வீதிவடங்க விநாயகர் திருக்கோயில் உள்ளது. உள்ளே வருவோர் முதலில் வழிபடுவது இந்த விநாயகரையேஆகும்.

அருள்மிகு வல்லபை கணபதி

புற்றிடங்கொண்டாரை வழிபடச் செல்வோர் காணும் மண்டபமாகிய தட்டுச்சுற்று மண்டபத்தில் அமைந்திருப்பது வல்லபை கணபதி ஆகும். வல்லபையோடு விநாயகர் அமைந்துள்ளார்.

அருள்மிகு ஐங்கலக்காசு விநாயகர்

புற்றிடங்கொண்டார் சந்நதியின்அருகில் ஐங்கலக்காசு விநாயகர் அமைந்துள்ளார். இவரை அழகிய சோழ விநாயகர் என்றும் கூறுகிறார்கள். அழகிய கோபுரம் இருக்கிறது. ஆகவே கோபுரத்தையும், விநாயகரையும் அமைத்தவன் அழகிய சோழனாக இருத்தல் கூடும்.

இவ்வாறாகப் பல்வேறு விநாயகர் திருமேனிகள் திருக்கோயிலுக்குள் உள்ளன. கோயிலுக்கு வெளியே பல்வேறு விநாயகர் திருமேனிகள் கமலாலயக் கரையில் உள்ளன.

அருள்மிகு மாற்றுரைத்த விநாயகர்

திருக்கோயிலுக்கு மேற்கே கமலாலயத் திருக்குளத்தின் கீழ்க்கரையில் வடகிழக்குகோடியில் கோயில் கொண்டிருபபவர் மாற்றுரைத்த விநாயகர். இவருக்கு பின்னே ஓர் அருமையான வரலாறு கூறப்படுகிறது.

சுந்தரர் மணிமுத்தாற்றில் பொன்னை இட்டுக் கமலாலயத்தில் (திருவாரூர்) எடுத்த அதிசயம் பெரியபுராணத்தில் காணப்படுகிறது.

வீதியின் ஓரமாக அமைந்திருப்பதால் யாவரும் எளிமையாக வழிபட வசதியாக இத்திருக்கோயில் உள்ளது. அலுவலகம் செல்வோரும் எதேனும் ஒரு செயலைச் செய்யச் செல்வோரும் மனமுருகி வழிபடும் விநாயகராக இவர் அமைந்துள்ளார்.

அருள்மிகு உச்சிஷ்ட கணபதி

கமலாம்பாள் திருக்கோயிலின் தென்புறத்தில் அமைந்திருப்பது உச்சிஷ்ட விநாயகர் ஆகும். ஸ்ரீவித்தையின் அம்சமான இவரை விநாயகர் உபாசகர்கள் கண்கண்ட மூர்த்தியாக வழிபடுகின்றனர்.

அருள்மிகு எழுந்து நிற்கும் நந்தி

எல்லாத் திருத்தலங்களிலும் சிவபெருமானின் முன்பு நந்தி அமர்ந்திருப்பார். ஆனால், தியாகேசப் பெருமானின் முன்பு இருக்கும் நந்தி எழுந்து நின்றவண்ணமாகக் காட்சிதருகிறார். இதற்கு சொல்லப்படும் காரணம் பொருத்தமாகவே இருக்கிறது.

சுந்தரருக்காகத் தூது சென்ற பெருமான்அவசரத்தில் நந்திமேல் அமர்ந்து செல்லாமல்திருவீதிகளில் நடந்தே சென்றார். இனி, பெருமானைநடக்கவிடக்கூடாது அவர் புறப்பட்டால் தாமும் எப்போதும் தயார் நிலையிலேயே இருக்க வேண்டும் என்பதால் எழுந்து நின்ற வண்ணமாக இருக்கிறது.

இந்த நந்தி அருள் வரலாற்றோடு நோக்கி இன்புறச் செய்கிறார். காலக்கணக்கில் அகப்படாதவனும், தானேயாவுமாய் பரவிநிற்பவனும், கைலாயநாதர் அதிபதியுமான ஆதிமூலம் ஆரூரில் பக்தர்களுக்கு வழங்கும் அருளை இயம்பிட முயன்றால் கடலை எவ்வாறு வலைக்குள் பிடிக்க முடியாதோ, காற்றை எப்படி கைகளால் அளக்க முடியாதோ அவ்வாறே அமையும்.

“பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை
போகமும் திருவும் புணர்ப்பானை
பின்னை என் பிழையைப் பொறுப்பானை !
பிழையெலாந் தவிரப் பணிப்பானை ?
இன்னதன்மைய னென்றறிய வொண்ணா ? 10
எம்மானை ! எளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற் பழத்தணியாரூரானை மறக்கலுமாமே!

- சுந்தரர்.

முகுந்தார்ச்சனை மற்றும் முசுகுந்த சகஸ்ரநாம அர்ச்சனை

‘திரிலோக சம்ரக்ஷணார்த்தாய ராஜவேஷதார்ய நமஹ’. அதாவது மூன்று உலகங்களையும் காக்கும் ராஜாவாக விளங்கும் திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி கடவுள்களின் மஹாராஜாவாக விளங்குகிறார். ஸ்ரீ மகாவிஷ்ணுவால் பூஜிக்கப்படும் தியாகராஜருக்கு மஹாவிஷ்ணுவின் பெயரால் முகுந்தார்ச்சனை என்ற அர்ச்சனை ரூ. 40,000/- மதிப்பிலும் தியாகராஜசுவாமியை திருவாரூருக்கு கொண்டு வந்த புராணகால முசுகுந்த மகாராஜாவின் பெயரால் ரூ. 20,000/- கட்டணத்தில் செய்யப்படும். முசுகுந்தசகஸ்ர நாம அர்ச்சனையும் திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலில் மட்டுமே செய்யப்படுகின்றன.

பொருள் இருப்பவனிடமும், உள்ளம் இருப்பவனிடமும் மட்டுமே கேட்பது கிடைக்கும். எதைக் கேட்பது, எங்கேக் கேட்பது, எப்படிக் கேட்பது, என தவிப்பவர்களே தசகோடி நூறாயிரம் சூரியன்கள் நேரே வந்ததுபோல், பிரகாசமாகவும் கோடி தாமரைமலர்கள் விரிந்தது போல் குமிழ் சிரிப்பும், கோலமிகு எழிலும் கொண்ட கோமகன் கும்பிட்டமட்டில் கோடியும் தருவான்

கூடவும் வருவான். நமது மகாராஜா திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி. அவரிடம் கேட்பது கிடைக்கும், கிடைப்பது நிலைக்கும், சுமையை இங்கே இறக்குங்கள், சகலமும் நீயே என சரணடையுங்கள் போகமும், செல்வமும் புகழும், பெருமையும் அவன் தருவான்.

அர்ச்சனை சீட்டு விற்பனை விபரம்

நவகோடி தீப சீட்டு	2.00
அஷ்டோத்திரம் அர்ச்சனை சீட்டு	2.00
இதர சந்நிதிகளுக்கு வஸ்திரம் சாத்த	5.00
கமலாம்பாள் கவசம் சாத்துதல்	10.00
மாப்பிள்ளை அழைப்பிற்கு	50.00
பால் அபிஷேகம்	100.00
கமலாம்பாள் சகஸ்ரநாமம்	200.00
இதர சந்நதி சகஸ்ரநாமம்	200.00
இதர சந்நதி அபிஷேகம்	200.00
கமலாம்பாள் அட்க்ஷர தீப அர்ச்சனை	200.00
மூலவர் தங்கச் கவச அர்ச்சனை	250.00
அபிஷேகக் கட்டணம்	500.00
ஸ்ரீ தியாகராஜ சுவாமி சகஸ்ரநாமம்	500.00
மோட்ச தீபம்	1,000.00
படகு சவாரி கட்டணம் (நபர் ஒன்றுக்கு)	20.00
அன்னதானம் 100 பக்தர்களுக்கு வழங்க	2,000.00
அன்னதானம் 50 பக்தர்களுக்கு வழங்க	1,000.00
நவக்கிரஹ ப்ரிதிஹோமம்	5,000.00
ஸ்ரீ தியாகராஜா முசுகுந்த சகஸ்ரநாமம்	20,000.00
ஸ்ரீ தியாகராஜா முகுந்தார்ச்சனை	40,000.00
ருத்ராபிஷேகம்	40,000.00

கமலாம்பாள் நவசக்தி அர்ச்சனை	15,000.00
நிரந்தர கட்டளைகள்	
பசுமடம் பராமரிப்பு கட்டளை	1,000.00
நித்திய பூஜைக் கட்டளை	1,000.00
நந்தவன பராமரிப்புக் கட்டளை	3,000.00
நித்ய அன்னதானம் நிரந்தர வைப்புநிதி	20,000.00

குறிப்பு

1. மேற்கண்ட கட்டணத்தில் அபிஷேகத்திற்குத் தேவையான பொருட்களை திருக்கோயிலே வழங்கும்.
2. நேரில் வர இயலாத அன்பர்கள் அபிஷேகக்கட்டணத்தை மணியார்டர் / டி.டி மூலம் அனுப்பி பிரசாதம் பெற்றுக்கொள்ளலாம்.
3. இத்திருக்கோயிலில் நித்ய அன்னதானத்திட்டம் உள்ளது. பக்தர்கள் தாராளமாக வழங்கும் நன்கொடைக்கு வருமானவரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது.
4. பக்தர்கள் நன்கொடைகள், காணிக்கைகள் மற்றும் அபிஷேகக் கட்டணங்களை அனுப்ப வேண்டிய முகவரி :
நிர்வாக அதிகாரி, அருள்மிகு தியாகராஜ சுவாமிதிருக்கோயில்,
திருவாரூர் - 610001. தமிழ்நாடு .போன். 04366 - 242343
5. All Donations, Offerings, Abhishega Fees Should be sent to The Executive Officer, Sri Thiyagaraja Swamy Temple, Tiruvarur - 610002. Tiruvarur. Tamilnadu. Ph : 04366 - 242343



பின்வரும் திட்டம் உபயதாரர் விருப்பப்படி தனித்திட்டமாக செய்யப்படும்.

சுவாமி முதல் பிரகாரம், இரண்டாம் பிரகாரம் மற்ற அனைத்து சுவாமிக்கும் **எண்ணெய் சாத்தி அபிஷேகம் செய்ய வேண்டும் அதற்கு**

எண்ணெய் டின்	-	3 (ந.எண்ணெய்)
பால்	-	50 லிட்டர்

எல்லா சுவாமிகளுக்கு வஸ்திரம் சாத்த வேண்டும்.

சந்தனம் - 2 கிலோ

மற்ற சுவாமிகளுக்கு புஷ்பம் சரம்பந்து, குங்குமம் அதற்கு தனி கூலி கொடுக்க வேண்டும்.

வஸ்திரம் சுவாமிக்கு

தியாகராஜசுவாமிக்கு பட்டுத் துண்டு

வன்மீகநாதருக்கு	-	**9 X 5** வேட்டி
ஸ்ரீ கமலாம்பாள் சுவாமிக்கு	-	6 கெஜம் புடவை
நீலோத்பலாம்பாள்	-	6 கெஜம் புடவை
ருணவிமோசனர்	-	**9 X 5** வேட்டி
துர்க்கைக்கு	-	6 கெஜம் புடவை
மகாலெட்சுமி	-	6 கெஜம் புடவை
சோமகுலாம்பாள்	-	6 கெஜம் புடவை
மகிஷாசுரமர்த்திணி	-	6 கெஜம் புடவை

திருக்கோயில் பூஜை காலங்கள்

பால்நிவேதனம்	-	காலை 6.00 மணி
கால சந்தி பூஜை	-	காலை 9.00 மணி
உச்சிகால பூஜை	-	மதியம் 12.00 மணி
சாயரட்சை பூஜை	-	மாலை 6.00 மணி
இரண்டாம் கால பூஜை	-	இரவு 8.00 மணி
அர்த்தஜாம பூஜை	-	இரவு 9.00 மணி

திரிலோக சம்ரக்ஷணார்த்தாய ராஜவேஷதார்ய நமஹ.

மூன்று உலகங்களையும் காக்கும்

ராஜாதிராஜன் ஸ்ரீதியாகராஜ சுவாமியே

சரணம் ! சரணம்!! சரணம் !!!

ரெ. ஜெயக்குமார், B.Sc., B.L., செயல்அலுவலர்.

திருவாரூர்த் திருக்கோயில்

தமிழகத்து திருக்கோயில்களிலேயே தலையாயதாகப் போற்றப் பெறும் பெருமை திருஆரூர் திருக்கோயிலுக்கே உரியதாகும். மகேந்திர பல்லவன் காலம் தொடங்கி சோழர்கள், பாண்டியர்கள் விஜயநகரமன்னர்கள், தஞ்சை நாயக்கர்கள், மராத்தியர்கள்காலம் வரை மலர்ந்த கலைச் செலவங்களையும், இலக்கியங்களையும், வரலாற்றுச் செய்திகளையும் தன்னுள் கொண்டு திகழும் ஆரூர் திருக்கோயிலின் தொன்மைச் சிறப்பு போற்றுதற்குரிய ஒன்றாகும்.

மகேந்திர பல்லவனின் காலத்தில் வாழ்ந்த சமயக் குரவரான நாவுக்கரசர் தாம் யாத்த தேவாரப்பதிகத்தில் "அம்பலத்தே மன்னிக்கூத்தை ஆடுவான் புகுவதற்கு முன்னோ பின்னோ அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே", "கோலம் நீ கொள்வதற்கு முன்னோ பின்னோ குனிதாடும் கோயிலாக் கொண்ட நாளே", "வேதத்தை விரிப்பதற்கு முன்னோ பின்னோ விழவாரூர் கோயிலாக் கொண்ட நாளே" - என வினவும் வினாக்களால் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன்பே ஆரூர் திருக்கோயில் திகழ்ந்த பாங்கை அறிய இயலுகிறது. மார்கழி ஆதிரை விழா, பங்குனி உத்திரப் பெருநாள், வீதிவிடங்களின் திருவீதிபவனி போன்றவற்றைக் கண்குளிரக் கண்ட நாவுக்கரசர் "எந்த மாதவஞ்செய்தனை நெஞ்சமே" எனப் போற்றும் திறத்தாலும் ஆரூர் தொன்மைப் பெருமையோடு விழாவின் பெருமையையும் நன்கறிய இயலுகிறது.

பல்லவர்கள் காலத்தில் - ஆரூர் திரு மூலட்டானம் எனும் புற்றிடங்கொண்ட திருக்கோயிலும், அரநெறியாம் திருக்கோயிலும் ஆரூரின் திருக்கோயில்களாகத் திகழ்ந்தன. பின்பு கி.பி. 9ஆம் நூற்றாண்டில் இவை தவிர சுந்தரரால் போற்றப்படும் பரவையுண்மண்டளியும் சிறப்புப் பெற்றது. சோழப் பெருமன்னர்கள் காலத்தல் பெரிய தளி (திருமூலட்டனாம் எனும் பூங்கோயில்) அரநெறி, திருமண்டளி,உலகீச்சரம், பிரம்மீச்சரம், அருமொழி ஈச்சரம் எனும் திருக்கோயில்கள் திகழ்ந்ததைத் தஞ்சைப் பெருங்கோயில் கல்வெட்டுக்களும், இலக்கியங்களும் குறிக்கின்றன. பின்னர் விஜய நகர - நாயக்கர்கள், மராத்தியர்கள் காலத்தில் வன்மீகேசம் (திருமூலட்டானம்) அசலேசம் (அரநெறி), ஆடகேசம், ஆனந்தேசம், விஸ்வகர் மேசம், தியாகேசம் என்ற பெயர்களில் ஆரூர் திருக்கோயில்கள் குறிக்கப் பெறுகின்றது. இவற்றுள் திருமண்டளி எனும் திருக்கோயில் தவிர மற்ற அனைத்தும் தற்போது அருள்மிகு தியாகராஜர் திருக்கோயில் என அழைக்கப்படும் பெருந்திருக்கோயில் வளாகத்துள்ளேயே அமைந்துள்ள பழம்பெரும் கோயில்களாகும்.

எண்ணிலாப் பழம்பெருமைகளோடு, ஏற்றமிகு சிற்பக் களஞ்சியத்தாலும், வளமை மிகு இலக்கிய வளத்தாலும், கவின்மிகு கட்டிடக் கலைச் சிறப்பாலும், காவியங்கள் பேசிடும் ஓவியங்களாலும், பண்ணும் பரதமும் பாங்குடன் வளர்த்ததாலும், எங்கும் காண இயலா ஏழிசைக்

கருவிகளாலும், கடிதினில் காலம் காட்டும் கல்வெட்டுக்களாலும்,

செல்வச் செழுமைகாட்டும் செப்பேடுகளாலும், கலைமிகு செப்புத் திருமேனிகளாலும், ஆழித்தேரின் அழகுடைப் பாங்காலும் மகுடமெனத் திகழும் ஆரூர் திருக்கோயில், 1500 ஆண்டுகால தமிழனின் சமயப்பெருமை, கவின் கலைகளின் திறமை மற்றும் தமிழகக் கலாசார பண்பாட்டுக்கூறுகளின் தனித்தன்மையைக் காட்டும் பெட்டகம் என்றே கூறலாம்.

கவின்மிகு கட்டிடக்கலைச் சிறப்புகள்

திருமூலட்டானமும் - அரநெறியும்

கி.பி. ஆறாம் நூற்றாண்டிலேயே சிறந்த கோயில்களாகத் திகழ்ந்த பூங்கோயில் எனும் ஆரூர் மூலட்டானமும், அரநெறியும் செங்கற்தளிகளாகத்தான் திகழ்ந்திருக்க வேண்டும். பின்னர் கி.பி. 9-10 ஆம் நூற்றாண்டுகளில்தான் கருங்கற்தளிகளாக இத்திருக்கோயில்கள் மாற்றம் பெற்றன. பூங்கோயில் எனும் புற்றிடங் கொண்ட ஈசரது திருக்கோயில் முதலாம் ஆதித்த சோழனால் மாற்றம் பெற்ற கற்றளியாகும். பீடம், உபபீடம், கோஷ்டம் மற்றும் பொதிகை விமான அமைப்பு ஆகியவை அனைத்தும் முதலாம் ஆதித்த சோழனின் கலைப்பாங்கில் திகழ்கின்றன. கருவறை, அர்த்தமண்டபத்துடன் மட்டும் திகழ்ந்த ஆதித்தனின் பணிக்குப் பின்னால் வந்த சோழப் பெருமன்னர்கள் முகமண்டபமும், மகாமண்டபங்களும் எடுத்து விரிவு செய்தனர்.

அரநெறியாம் திருக்கோயில் செங்கற்தளியாக இருந்ததை சோழப் பேரரசி செம்பியன்மாதேவியார் கற்றளியாக மாற்றியமைத்ததை முதலாம் இராசராசனின் கல்வெட்டு கூறுகின்றது. இப்பேரரசியார் கருவறை அர்த்த மண்டபப்பகுதியை எடுத்தபோதும், மகாமண்டபம் பின்னாளில்தான் எடுக்கப்பட்ட தென்பதைக் கல்லெழுத்துக்கள் உறுதி செய்கின்றன. இத்திருக்கோயிலின் கருவறையின் கட்டிடப்பாங்கு செம்பியன் மாதேவியார் பாணி என கலை இயல் வல்லுநர்கள் கூறும் பாங்கில் (ஆதித்தன் கால கலை அம்சம் சற்று விரிவடைந்த நிலை) அமைந்துள்ளது. இவ்விரண்டு கருவறைப் பகுதிகளே இன்றுள்ள திருக்கோயிலின் தொன்மையான கட்டிடப் பகுதிகளாகும்.

திருக்கோபுரங்கள்

"மறைநான்கும் கோபுரமாய் வான் கிழிக்கும் வாசலிது" - என முத்துக்கவிராயர் தியாகேசர் குறவஞ்சியிலும், மனுநீதிச் சோழராஜன் நாடகத்திலும் குறிப்பிடுவதைப் போலவே, வான்கிழிக்கும் வண்ணக் கோபுரங்களாக வெளிமதிலில் நான்கு பெரிய கோபுரங்களும், ஒரு சிறிய கோபுரமும் (கீழ்திசையில்) அணி செய்கின்றன. இரண்டாம் மதிலை இரண்டு திருக்கோபுரங்களும் மூன்றாம் மதிலை அணுக்கன் திருக்கோபுரமும் அலங்கரிக்கின்றன.

இவை ஒவ்வொன்றும் வரலாற்றில் பல்வேறு காலங்களின் கட்டிடக்கலைப் பாணியின் எடுத்துக் காட்டுக்களாகத் திகழ்வதோடு, தனித்த வரலாற்று முத்திரைகளையும் சுமந்து நிற்பது சுவையான ஒன்றாகும்.

கிழக்கு இராஜகோபுரம்

மகாதுவாரம் என வாஸ்த்து நூல்கள் குறிப்பிடும் கிழக்கு இராஜகோபுரம் ஆரூர் திருக்கோயிலின் முக்கிய திருவாயிலாகும். மகா துவாரமான கிழக்கு வாயிலின் மேல்தளம் (முதல் தளம்) வரை முற்றிலும் கருங்கற் கட்டுமானமாகவும், இதற்குமேல் 6 பிரஸ்தளங்களும் ஏழு துவாரங்களும் உள்ளன. இவை அனைத்தும் சிகரம் உட்பட செங்கற் திருப்பணியாகும்.

உபபீடத்திலிருந்து முதல் தளம் வரை உள்ள கருங்கற்கட்டுமானம் 12-13 ஆம் நூற்றாண்டின் சோழர்கால சிற்ப-கட்டிடக்கலையின் உயரிய எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. கட்டிடக் கலைப்பாங்கு, கோஷ்டங்கள், பஞ்சரங்களின் அமைப்பு கோஷ்டத்தில் தெய்வத்திருவுருவங்கள் நிர்மாணம் போன்ற கலை அம்சங்களில் இத்திருக்கோபுரம் திருபுவனம், தில்லை, திருஆனைக்கா போன்ற திருக்கோபுரங்களை ஒத்து திகழ்கின்றது. சிவபெருமானின் பல்வேறு கோலங்கள், எண் திசைக்குரிய தெய்வங்கள், வாயிற்காப்போர், ஆதித்தன், திருமால் போன்ற தெய்வத் திருவுருவங்களும் நாட்டியச் சிற்பங்களும், யாளி வரிசையின் எழிற்கோலமும் இத்திருக்கோபுரத்திற்குரிய சிறப்பு அம்சங்களாகும்.

கலைநயத்தால் இமயமெனத்திகழும் இந்த இராஜகோபுரம், சிறந்ததொரு வரலாற்றுப் பின்னணியையும் கொண்டு திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும்.

கி.பி. 1202-க்கு முன்பு சோழமாமன்னன் மூன்றாம் குலோத்துங்கனுக்கும், பாண்டிய மன்னன் சடையவர்மன் குலசேகர -னுக்கும் பெரும் போர் நிகழ்ந்து பாண்டியன் புறமுதுகெய்தினன். சோழன் "திரிபுவன வீரதேவன்" எனப் பட்டம் புனைந்து மதுரையில் வீராபிஷேகம், விஜயாபிஷேகம் செய்து கொண்டான். இதன் விளைவால்

கிடைத்த பாண்டிநாட்டு கருவூலத்திலிருந்து கிடைத்த பசும்பொன் கொண்டு திரிபுவன வீரேச்சரம் எடுத்ததோடு திருவாரூர் வன்மீகனின் திருக்கோபுரமும் எடுத்தான். இதனைச் சிறைகொண்ட புனல் வையைச் சேரபாண்டியன் மண்டலத்து இறைகொண்ட பசும்பொன்னும் இறையிலியும் கொண்டு பைம்பொன் மதில் திருவாரூர் வானவர்க்கு அளித்ததாக குலோத்துங்கனின் மெய்கீர்த்தி கூறுவதோடு, திருபுவனம் கிரந்தக் கல்வெட்டுப் பாடல்,

"வல் மீகீஸ்வர வேஸ்வதி நிகிலம்
நிர்மாய ஹைமதே நிரு போ
வல்மீகாதி பதேஸ் வகார சபா
திவ்யாம் மஹத் கோபுரம்"

என்று கூறி மதுரையம்பதியில் மன்னவன் கொண்ட வெற்றியின் சின்னமாக ஆரூர் திருக்கோபுரம் எடுக்கப்பட்டதை விவரிக்கின்றது.

வரலாற்றுச் சிறப்புடைய இத்திருக்கோபுரத்தில் அமைந்துள்ள இரண்டு மாடங்களில் மாமன்னவன் குலோத்துங்கன், அவனது இராஜகுரு ஈஸ்வர சிவர் எனும் சோமேஸ்வரர் ஆகிய இருவருடைய உருவச்சிலைகளும் கல்வெட்டுப் பொறிப்புகளோடு இன்றும் உள்ளன. கலை நயத்தால் மட்டுமின்றி வரலாற்றுப் பெருமையாலும் இத்திருக்கோபுரம் தன்னிகரிலாப் பெருமையோடு திகழ்கிறது.

கிழக்குக் கோபுரத்தினை ஒத்த மேற்குக் கோபுரம் கி.பி. 15 ஆம் நூற்றாண்டுக் கலைப்பாங்குடன் அமைந்துள்ளது. முதல் தளம் வரை கருங்கற்பணியாகத் திகழும் இக்கோபுர வாயிலின் இரண்டு பக்கங்களிலும் நாட்டிய மங்கையர் மற்றும் புராணச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. கோஷ்ட தேவதைகள் இடம் பெறவில்லை. எந்த மன்னனின் பணி என்பதைக் காட்டும் தெளிந்த சான்றுகள் இதுவரைக் கிடைக்கவில்லை. இக்கோபுரத்தின் மேற்பகுதியில் காணப்படும் வண்ணச் சுதைச்சிற்பங்கள் கலைநயமிக்க நேர்த்தியானவை.

வடக்குக் கோபுரம் தஞ்சை நாயக்க மன்னன் செவ்வப்பன் காலத்தில் எடுக்கப்பட்டதாகும். கருங்கற்பணியாக முதல் தளம்வரை அமைந்துள்ள இத்திருக்கோபுரத்தில் சிற்பங்கள் இடம்பெறவில்லை. இக்கோபுரவாயிலின் கீழ்ப்புறத்தில் இரண்டு மாடங்களில் செவ்வப்ப நாயக்கனின் கருங்கற்சிலையும், அவனது காலத்தில் இத்திருக்கோயில் நிர்வாகத்தில் சிறப்பிடம் வகித்த பண்டாரத்தின் உருவச்சிலையும் இடம்பெற்றுள்ளன. செவ்வப்பநாயக்கனின் கல்வெட்டுக்கள் சில இத்திருக்கோயிலில் இடம் பெற்றுள்ளன. தெற்கு மற்றும் வடகிழக்கு திசைகளில் அமைந்துள்ள கோபுரங்கள் சற்று சிறியனவாக பிற்காலப் பணிகளாகத் திகழ்கின்றன.

இரண்டாம் மதிலின் கிழக்குக் கோபுரம் சோழர் காலத்துப் பழமையான கோபுரமாகும். உயரம் குறைந்த கோபுரமாக இருப்பினும் குறிப்பிடத்தக்க சிற்பச் சிறப்புகள் இடம்பெறவில்லை. இதே மதிலின் மேற்கு வாயிலாகத் திகழும் மேற்கு இரண்டாம் கோபுரம் கருங்கற்பணியாகத் திகழ்கிறது. இதனை விஜயநகர மன்னர் இரண்டாம் தேவராயர் காலத்தில் (கி.பி. 1422 - 1446) தெட்சிண சமுத்திராபதி லக்கன்ன தன்ன நாயக்கன் என்பான் பெயரில் நாகராசர் என்பவர் எடுத்ததாக இக்கோபுரவாயிலில் அமைந்துள்ள தமிழ் மற்றும் கன்னட கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. மூன்றாம் மதிலின் ஒரே வாயிலான அணுக்கன் திருவாயில் கோபுரம் சோழர்கால கட்டுமானமாகும். பலமுறை திருப்பணிகளுக்குட்பட்டதால் பல்வேறு பிற்கால கலை அம்சங்களையும் இக்கோபுரத்தில் காணலாம்.

புற்றிடங்கொண்ட பரமனின் பூங்கோயிலுக்கு இணையாக அமைந்துள்ள தியாகராசர் திருக்கோயில் மாமன்னன் முதலாம் இராசேந்திர

சோழனால் அவனது உளம் கவர்ந்த நங்கை பரவை என்ற பெண்ணணங்கின் வேண்டுகோளுக்காக எடுக்கப்பட்ட கற்றளியாகும். இடைக்காலச் சோழர்களின் அழகிய கட்டிடப் பணியை இக்கற்றளியில் காணமுடிகிறது. நீலோத்பலாம்பாள் மற்றும் கமலாம்பாள் திருக்கோயில்களாகிய இரண்டு திருக்காமக் கோட்டங்களும் சோழர்களின் சீரிய படைப்புகளாயினும் பிற்காலத் திருப்பணிகளுக்குப் பலமுறை இலக்கானதால் பல்வேறு கலைநயங்களையும் இணைத்துச் சுவைக்க முடிகிறது.

திருமண்டபங்கள்

தேவாசிரியம் சுந்தரரால் திருத்தொண்டத்தொகை இயற்றப்பட்ட இப்புனித மண்டபத்தின் பெருமைகளைச் சேக்கிழார் திருத்தொண்டர் மாக்காதையில் சிறப்பாகப் பேசுகிறார். கி.பி. 9 ஆம் நூற்றாண்டிலிருந்து திகழும் இம்மண்டபத்தில் பிற்காலச் சோழர்களின் கலை வண்ணமும் மிளிர்கின்றன. மிகப்பெரிய மண்டபமான தேவா சிரியம் கருங்கற்பணியாகவே அமைந்துள்ளது. பீடம், உபபீடம், பத்மம், குமுதம், ஆகிய பகுதிகளுடன் திகழும் தளமும், எழில் மிகுந்த தூண்களும் இம்மண்டபத்தின் சிறப்பு அமசங்களாகும்.

சைவ சமய வரலாற்றிலும் பல நிகழ்ச்சிகளுடன் தொடர்புடைய இம் மண்டபம் கூத்தும், பரதமும் நிகழ்ந்த கலை அரங்கமாகவும் திகழ்ந்திருக்கிறது. இவையன்றி இன்றும் தமிழகத்தின் சிறப்பான தொன்மை ஓவியக்கூடங்களில் இதுவும் ஒன்றாகத் திகழ்கிறது. 18

இராஜநாராயணன் திருமண்டபம்

ஆரூர் திருக்கோயிலில் அமைந்துள்ள மண்டபங்களிலேயே மிகத் தொன்மையான அழகுடன் திகழ்வது இராஜநாராயணன் மண்டபமாகும். இம்மண்டபமும் பிற்காலத் திருப்பணிகளுக்குட்பட்ட போதும் பெரும்பகுதி பழமையின் எச்சங்களே அணுக்கன் திருவாயிலுக்கு எதிராக அமைந்துள்ள இம்மண்டபம் கருங்கற்பணியாக, சிம்மத் தூண்கள் பெற்றுத் திகழ்கிறது. உத்திரத்தின் உள்விளிம்புகளில் நடனமாதர் தம் சிற்பங்களும் இடம் பெற்றுள்ளன.

கலை நயத்தால் சிறப்பிக்கப்படும் இம்மண்டபம் வரலாற்றுப் பெருமையும் சிறப்பும் உடையதாகும். சோழப் பெருமன்னர்கள் காலத்தில் ஆரூர் ஊர்ச்சபையினர் கூடும் பொது மன்றமாகவும் இம்மண்டபம் திகழ்ந்திருக்கின்றது. பல்வேறு ஊர்ச்சபையினரும், நாட்டவரும் கூடி சமுதாய முடிவுகளை எடுத்த பெருமன்றமாகவும் இம்மண்டபம் திகழ்ந்ததை அரிய கல்வெட்டொன்று எடுத்தியம்புகிறது. பங்குனி உத்திரப் பெருவிழாக்கள் மட்டுமின்றி ஆதிரை விழாவின் போதும் ஆரூர் அண்ணல் எழுந்தருளும் சிறப்புடை மண்டபமும் இதுவே.

இராஜேந்திர சோழன் திருமண்டபம்

கடாரம் வென்ற பெருமன்னனின் உள்ளம் கவர்ந்த நங்கை நல்லாள் பரவை நங்கையின் வேண்டுகோளுக்கு இணங்கி மாமன்னனின் மைந்தன் முதலாம் இராஜாதிராஜன் எடுத்த பெருமண்டபமாக இதனைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. இது தற்போது சபாபதி மண்டபம் என்ற பெயரில் அழைக்கப்படும் மண்டபமாக இருக்கலாம் என ஊகம் கொள்ள இயலுகிறது. இம்மண்டபமும் பிற்காலத் திருப்பணிகளுக்கு இலக்கான ஒன்றே.

சிற்பச்செழுமை

கலை அழகு மிளிரும் எண்ணிலாச் சிற்பங்களைச் சுமந்து நிற்கும் ஆரூர் திருக்கோயில் தமிழகத்துச் சிறப் வளமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டான திருக்கோயிலாகும். கல்லில் கவின்மிகு சிற்பங்களைத் தமிழகம் கண்ட முதற் பொற்காலம் மகேந்திரபல்லவன் காலமாகும். இப்பெருமன்னன் காலத்தில் சோழமண்டலம் பல்லவனின் ஆளுகையின் கீழ் இருந்தது புறச்சமயம் விடுத்துச் சைவம் தழுவிய இவ்வேந்தர், வேந்தன் காலத்திலும் இவனுக்குப் பின்னவர்கள் காலத்திலும் பல திருக்கோயில்களில் எழில்மிகு சிற்பங்கள் இடம்பெற்றன. இவை பல்லவகலைநயம் எனக் குறிப்பிடப்படும் தனித்தன்மை பெற்றுத் திகழ்ந்தன. இத்தகைய கலைநயம் கொண்ட சிற்பங்களாக ஆரூர் திருக்கோயிலில் அன்னையர் எழுவர் (சப்த மாதர்கள்) கணபதி, மகேசன், துர்க்கை போன்ற சிற்பங்கள் இரண்டாம் திருச்சுற்றில் இடம் பெற்றுள்ளன. முதற்திருச்சுற்றில் உள்ள யமசண்டீசர் என்ற பெயரில் உள்ள சிற்பம் தென் திசைக்காப்புக் கடவுளான இமயன் என்பதும், இது பல்லவர்கள் காலப்பாங்குடைச் சிற்பம் என்பதும் சிற்ப இயல் வல்லுநர்கள் மட்டுமே அறிந்த ஒன்று.

மேலைச் சாளுக்கிய மன்னனான இரண்டாம் புலிகேசியை அழித்து அவனது தலைநகரைக் கைப்பற்றி வரலாற்றில் முத்திரை பதித்தவர் பரஞ்சோதி எனும் பல்லவர் தளபதி. நரசிம்மப் பல்லவனின் சேனைத் தளபதியான இவர் வாதாபி வெற்றியின் நினைவாக அங்கிருந்து விநாயகப் பெருமான் திருவுருவைக் கொண்டுவந்து சோழநாட்டில் வைத்ததாக வரலாற்றுச் சிறப்பு உண்டு. அவர் கொண்டுவந்த விநாயகர் அவரது சொந்த ஊரான திருச்செங்காட்டங்குடியில் பிரதிட்டை செய்ததாகவும், அல்லது திருவாரூரில் வைத்ததாகவும் இரண்டுவிதக் கருத்துக்கள் உண்டு. செங்காட்டங்குடியில் "வாதாபி விநாயகர்" என்ற பெயரில் பிள்ளையார் குலோத்துங்கன் காலத்திய சிற்பமாகும். ஆனால் திருவாரூரில் முதல் திருச்சுற்றில் இடம்பெற்றுள்ள "வாதாபி விநாயர்" கலை அம்சத்தால் சாளுக்கிய கலை நெறியை முற்றிலும் ஒத்துத் திகழ்கிறது. சோழநாட்டில் பார்க்க இயலாத ஒருவகைப் புதுமைப்படைப்பே இச்சிற்பம். முத்து சுவாமி தீட்சிதர் அவர்கள் இயற்றிய "வாதாபி கணபதிம்" என்ற பாடல் இந்த மூர்த்திக்கு முன்புதான் பாடப்பட்டது என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

புற்றிடங்கொண்ட பரமனின் கருவறையின் இருபுறமும் இரண்டு அழகிய வாயிற்காப்போர் சிலைகள் உள்ளன. முதல் ஆதித்தன் காலத்தின் நேர்த்தியான சிற்ப எழில் மிகுந்த படைப்புகள் இவை. இதே கருவறையின் நிலைப்படியின் மேல்விளிம்பில் கயிலை உறையும் நாதன் மணக்கோல நம்பியாகக் காட்சி நல்குகிறார். உமையவள் கரம்பற்றி, தேவர்கள் சூழத்திகழும் இச்சிற்பத் தொகுதி உயரிய சிறப்புடையதாகும். புற்றிடங்கொண்டார் திருக்கோயில் கருவறையின் வெளிப்புறம் பட்டிகைத் தொகுதியில் நுண்சிற்பங்கள் உள்ளன. முற்காலச் சோழர்களின் சிறப்புப் பணியான இவ்வகைச் சிற்பங்களில் ஆலிலைக் கண்ணன், வேழம் உரித்த வேதநாயகன் போன்ற சிற்பங்கள் கலைநயம் வாய்ந்தவை.

அரநெறியாம் திருக்கோயில் கோஷ்டங்களில் இடம் பெற்றுள்ள துர்க்கை, பலியாக உறுப்பு அரிந்து தரும் வீரர்கள், கங்காளமூர்த்தி, உமையொருபாகன், இலிங்கோத்பவர், மன்னர்கள் திருவுருவங்கள், போன்றவை குறிப்பிடத்தகுந்த சிறப்பு வாய்ந்தவை. கும்பகோணம் கீழக்கோட்டம் (நாகேஸ்வரன் கோயில்) சீனிவாச நல்லூர் அரங்கநாதர் கோயில் போன்ற திருக்கோயில் சிற்பங்களை ஒத்த எழில்வாய்ந்த சிற்பங்கள் இவை என்பது சிற்ப வல்லுநர்களின் ஒருமித்த கருத்தாகும்.

கிழக்கு இராஜகோபுரத்திலுள்ள சிற்பங்கள் அத்தனையும் முத்துக்களே. சிவபெருமானின் பல்வேறு கோலங்கள், உமை மாலவன், எண்திசைக்காவலர், நாகராஜன், சூரியன் வாயிற்காவலர் போன்ற தெய்வத்திருவுருவங்கள் பிற்காலச் சோழர்கலையின் உன்னதப் படைப்புகள். தில்லையில் நாட்டிய மாதர்கள், சிற்பங்கள், தஞ்சையில் பரமனே ஆடும் தாண்டவக் கோலச் சிற்பங்களும், சுவரில் காணப்படும் அரை செதுக்குருவச் சிற்பங்களே. ஆனால் ஆரூர் திருக்கோயிலில் உள்ள எல்லா நடன மாதர் சிற்பங்களும் கர்ண முத்திரைகளின் அத்தனை வெளிப்பாடுகளையும் துல்லியமாகக் காட்டும் வண்ணம் முழுச்சிற்பங்களாக (முதுகுப்புறமும் தெரியும் வண்ணம்) செதுக்கப்பட்டு, பின்பே தேர்ப்பாவைகளை இணைப்பது போன்று கோபுரத்திலும், மண்டபங்களிலும் இணைத்துள்ளது. சிற்பக்கலையிலும், ஆடற்கலையிலும், அன்று ஆரூர் முழுமையாகப் பெற்ற ஓர் கேந்திரமாய்த் திகழ்ந்தது என்பதை நமக்குக் காட்டும் சான்றுகளாகவே நிற்கின்றன.

நீதி வழுவா சோழர்களின் பெருமைக்கு மனுச்சோழன் வரலாறு ஓர் எடுத்துக்காட்டு. சேக்கிழார் திருத்தொண்டர் மாக்கதையில் நகரப் பெருமை கூறும்போது இம் மன்னவனின் திறம் உரைக்கிறார். விக்கிரம சோழன் காலத்து ஆரூர் கல்வெட்டொன்று இக்காவியத்தின் பெருமையினை வரலாற்றோடு இணைத்துப் பேசுகிறது. இக் கல்வெட்டை இடம் பெறச்செய்த விக்கிரம சோழன் இக்காவியத்திற்கு கல்லில் வடிவம் கொடுத்தான். கல்லில் தேர் அமைத்து அதன் ஆழியில் கன்று சிக்கியுள்ள காட்சியையும் கன்றை இழந்த கோ, கொம்பால் மணி

அடிக்கும் காட்சியையும் சிற்பங்களாக அமைத்தான். கல் தேரின் உட்புறம் விடை மீது சாய்ந்த வண்ணம் அமர்ந்துள்ள கயிலையம் பெருமான் மற்றும் உமையவள் அருகே ஓர் புறம் உயிர்பெற்று எழுந்த கன்றும், தாய்ப்பசுவும் நிற்க எதிர்ப்புறம் வணங்கிய நிலையில் மனுவேந்தன் அவன் மைந்தன் பிரிய பிருத்தன், அவனது அமைச்சன் பாலையூரினனான உபயகுலாமலன் ஆகியோர் நிற்கும் காட்சியும் இடம் பெற்றுள்ளது. தேரின் தூண் ஒன்றில் ஆரூர் இறையவனைக் கரம் கூப்பித்தொழும் விக்கிரமசோழன், அவனது காலத்தில் வாழ்ந்து மாளிகையும் மனையும் பெற்ற உபயகுலாமலனின் வழித்தோன்றலான சந்திரசேகரன் ஆதிவிடங்கன் எனும் பாலையூரினனின் சிற்பமும் வடிக்கப்பட்டுள்ளன. புராணத்தோடும் வரலாற்றோடும் பின்னிப்பிணைந்த அரிய சிற்பத்தொகுதிகளாக இவை திகழ்கின்றன.

யோக நிலையில் அமர்ந்தவளாகக் கமலாம்பளும்,நின்ற கோலத்தில் அருகிருக்கும் தோழியின் தோளில் அமர்ந்துள்ள குழவி முருகனின் சிரம் தீண்டும் அருள் நங்கையாக நீலோத்பலாம்பாள் சிற்பமும் வடிக்கப்பட்டுள்ளது புதுமையான படைப்புகளாகும்.

தேவகண்மீசம் எனும் பிற்காலத் திருக்கோயில் தஞ்சை நாயக்கர்கள் காலச் சிற்பப் பள்ளியின் சிறந்த படைப்பாகும். மிக நுணுக்கமான வேலைப்பாடுகள் அமைந்துள்ள இச்சிறிய கற்றளியில் தேர்ச் சிற்பம் ஒன்று காட்டப்பட்டுள்ளது. தேரில் பசு ஒன்ற நிற்க அதன் ஆழியில் மனிதன் உருவம் ஒன்று கிடப்பதுபோன்று வடிக்கப்பட்டுள்ளதும் நோக்குதற்குரியவொன்று.

ஆனந்தீச்சரம் எனும் கோயிலின் பிறைமாடத்தில் இடம் பெற்றுள்ள இராஜேந்திர சோழன் பரவை நங்கை சிற்பம், கிழக்கு இராஜ கோபுரத்திலுள்ள மூன்றாம் குலோத்துங்கன், ஈஸ்வரசிவர், வடக்கு வாயிலிலுள்ள செவ்வப்பன், அகோரபண்டாரம் ஆகியோருடைய படிமங்கள் வரலாற்று நாயகர்களின் உருவச்சிலைகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

சுண்ணச்சுதை சிற்பங்கள்

மேலைக் கோபுரத்திலுள்ள பல தொகுதி சுண்ணச்சுதைச் சிற்பங்களில் சிவபுராணக்கதைகளும் விஷ்ணு புராணக்கதைகளும் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் இக்கோபுரத்தின் தென் திசையில் இடம் பெற்றுள்ள சரபமூர்த்தி சிற்பம் குறிப்பிடத்தக்கதாகும். இரணியனின் ஆணவத்தைக் களைந்த நரசிம்மன், உதிரவெறியால் தேவர்களையே தாக்க முற்பட்ட போது கயிலயம்பதியோன் திருவருளால் அவரது அம்சமான வீரபத்திரர் சிம்புள் எனும் சரபவடிவமெடுத்து நரசிம்மத்தை அழித்தார். சரபோ உபநிஷத், சரபபுராண அடிப்படையில் அமைந்த சரபவடிவம் மிக அழகாக வடிக்கப்பட்டுள்ளது. சிம்ம உடலும், சிறகுகளும் கொண்டு சரபம் விண்ணிலிருந்து இறங்கி நரசிம்மத்தை அழிக்கும் காட்சி அரிய ஒன்று. கற்சிற்பங்களாலும், கலைமிகு சுதைகளாலும் ஆரூரின் பெருமை மேலும் விரிகின்றது.

சிங்காதனத்து ஓவியங்கள் :

வரலாற்றுக் கால ஓவியங்களைப் பெற்ற பாங்காலும் ஆரூர் திருக்கோயில் சிறந்ததொரு ஓவியக் கருவூலமாகத் திகழ்கிறது. கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் சிங்காதனம் என்ற ஓவியன் தஞ்சை மராத்திய மன்னன் சகஜியின் ஆதரவால் இந்த அற்புதக் கலைக் கூடத்தைப் படைத்தான். இம்மண்டபத்துச் சுவர்களும், விதானங்களும் சிங்காதனத்தின் தூரிகையின் துணைகொண்டு வண்ணப் பொலிவு பெற்றன. மனுச்சோழனின் மாக்கதையும், முசுகுந்த புராணமும் வண்ணக் கலவையால் பேசின. இம்மண்டபத்து வடபுறச்சுவரில் இடம் பெற்றிருந்த மனுநீதிச்சோழன் கதையின் வண்ண ஓவியத் தொகுப்பு காலவெள்ளத்தான் பொலிவிழந்து மங்கிவிட்டது. ஆனால் விதானத்தில் இடம் பெற்ற முசுகுந்தன் கதை இன்றும் புதுப்பொலிவோடு திகழ்கிறது.

தமிழகத்தில் மலர்ந்த நாயக்கர்கள் கால ஓவியப் பாணியில் அமைந்த இந்த ஓவியத் தொகுப்பில் ஒவ்வொரு காட்சிக்கும் கீழ் அக்காட்சி பற்றிய விளக்கங்கள் தமிழில் எழுதப்பெற்றுள்ளன. இரண்டு இடங்களில் துவங்கும் முசுகுந்த புராணத்தொகுப்பு இடையே சங்கமித்து, பின்பு புதியதொரு கதைத் திருப்பத்துடன் தொடர்கிறது. தேவர் உலகத்தில் நிகழ்ந்த வாரகலி அரசுடன் சண்டை இந்திரன் முசுகுந்தன் துணை நாடல் முசுகுந்தன் துணையுடன் வெற்றி பெறுதல் போன்ற காட்சிகள் ஒருபுறமும் திருமால் குழந்தைவேண்டி யாகம் செய்தல் சிவனருளால் சோமாஸ்கந்தர் திருமேனி பெறுதல். திருமாலுக்கும் வாரகலி அசுரனுக்கும் சண்டைக்காட்சி அரம்பையர் ஆடுதல் போன்ற காட்சிகள் தொடர்கின்றன. இந்திரனும் திருமாலும் சந்தித்தபின்பு சோமாஸ்கந்தர் திருமேனியை இந்திரன் பெறுதல் ஆகிய காட்சிகளை அடுத்து முதற் தொகுதியும் இரண்டாம் தொகுதியும் இணைந்து புதிய காட்சித் திருப்பம் காணப்படுகிறது. தேவர் உலகத்திற்குச் சென்ற முசுகுந்தன் இந்திரனின் சூழ்ச்சியை வென்று தியாகராஜர் திருமேனியோடு ஆறுவிடங்கமூர்த்திகளையும் திருவாரூருக்கு எடுத்துவருதல் ஆரூரின் பத்துநாள் விழா காட்சிகள் திருக்கோயில் அமைப்பு நகரின் முக்கிய மனிதர்கள் கூத்து மற்றும் இசை நிகழ்ச்சிகள் பரத அபிநயங்கள் வாண வேடிக்கைகள் போன்ற பல்வேறு காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வோவியத்தொகுப்பு 17-ம் நூற்றாண்டில் ஆரூர் எவ்வாறு இருந்தது எத்தனை விழாக்கள் நடந்தன. மக்களின் உடை, அணிகலன்கள் வாணவெடி செய்வதில் அவர்களின் திறன், நகரின் முக்கிய நபர்கள், கூத்துக்களின் வகைப்பாடுகள், இசைக்கருவிகள் பற்றிய செய்திகள் ஆகிய அனைத்தையும் இன்று நம் கண் முன் நிறுத்தும் காலக்கண்ணாடியாகவே திகழ்கிறது. நாட்டியங்களின் பெயர்கள், வாணங்களின் பெயர்கள், இசைக்கருவிகளின் பெயர்கள் அதை இயக்கும் கலைஞர்களின் பெயர்கள், போர்ப்படை பற்றிய குறிப்புகள் முக்கிய மனிதர்களின் பெயர்கள் ஆகிய அனைத்தும் அந்தந்த ஓவியங்களிலேயே ' 17-ஆம் நூற்றாண்டு எழுத்தமைதியில் எழுதப்பட்டுள்ளது நோக்குதற்குரியவொன்று.

அனைத்திலும் மகுடமாக இவ்வோவியன் தான்படைத்த ஓவியத் தொகுதியில் ஐந்து இடங்களில் தனது ஓவியத்தையும் எழுதி அதனருகே இந்த சித்திரம் எழுதுகின்ற சித்திரவேலை "சிங்காதனம் சதாசேவை" என்ற குறிப்பும் எழுதியுள்ளது. புதுமையான ஒன்றாம்.

17-ம் நூற்றாண்டின் தமிழனின் ஓவியத்திறன் சமுதாயக் கூறுகள் புராண இயல் அறிவு, இசை, நாட்டியம் மற்றும் நுண் கலைகளின் செயல்பாடு வாணவெடிகள் போன்றவை செய்வதில் இருந்த திறன் ஆகிய பல்வேறு துறைகளின் வெளிப்பாடுகளாகவே இக்கலைக்கூடம் திகழ்கிறது.

ஆரூர் வளர்த்த ஆடற்கலை :

"ஆடரவக் கிண் கிணிக்கால் அன்னானோர் சேடனை
ஆடுந்தீக் கூத்தனை நான்கண்ட தாருரே"

என நாவுக்கரசர் போற்றும் அண்ணல் ஆடுகின்ற ஆரூர்ப்பதி தமிழக வரலாற்றின் ஆடற்கலையை வளர்த்த முக்கிய மையங்களுள் ஒன்று என்பதைச் சோழர்களது கல்வெட்டுகளும், இலக்கியங்களும் மெய்ப்பிக்கின்றன.

தான் ஆடி உலகெலாம் மகிழ்வித்த ஆடல்வல்லான், ஆரூர் பதியில்தான் அமர்ந்து நடன நங்கையர் ஆடல்கண்டு மகிழ்ந்தான். இது உண்மையான வரலாறும் கூட தியாகவினோதனாம் வீதிவிடங்கப் பெருமானின் திருமேனியை விழாக்காலங்களில் தேவாசிரிய மண்டபத்தில் எழுந்தருளச் செய்து அத்திருமேனி முன்பு தலைசிறந்த ஆடல் அணங்குகளை ஆடச்செய்து மன்னனும் மக்களும் போற்றினர். இதனை ஆரூர் திருக்கோயில் கல்வெட்டுக்கள் விரிவாகக் கூறுகின்றன.

விக்கிரம சோழனின் கல்வெட்டொன்று திரிபுவன சக்ரவர்த்தி ஸ்ரீ விக்கிரம சோழதேவர்க்கு யாண்டு ஐந்தாவது மிதுன ஞாயிற்றும் பூர்வபட்சத்து சப்தமியும் ஞாயிற்றுக்கிழமையும் அத்தமுமான நாள் முன்னூற்று நாற்பது கேயமாணிக்க வளநாட்டு திருவாரூர் சுற்றத்து திருவாரூர் உடையார் வீதிவிடங்கன் சித்திரைத் திங்கள் சதயநாளில் தேவாசிரியனாம் திருக்காவணத்தில் சிம்மாசனத்து எழுந்தருளியிருந்து பதியிலாளர் தியாகவிநோதத் தலைக்கோலியின் ஆட்டம் கண்டருளா நிற்ப....." என்று கூறுகிறது.

இதே போன்று முதற் குலோத்துங்களின் கல்வெட்டொன்று வீதிவிடங்க தேவர் தேவாசிரியத்தில் எழுந்தருளியிருந்து புக்கத்துறை வல்லவத் தலைக்கோலியின் ஆட்டம் கண்டு மகிழ்ந்ததாகவும், பிறிதொரு கல்வெட்டு இதே மண்டபத்தில் பூங்கோயில் நாயகத் தலைக்கோலியின் ஆட்டம் கண்டதாகவும் பெருமையோடு குறிப்பிடுகின்றன.

பதியிலார் எனும் ஆடலணங்குகள் இறைவனின் திருக்கோயிலில் ஆடல் புரிவதற்கென்றே தங்களை அர்ப்பணித்துக்கொண்டு, திருக்கோயில் அளிக்கும் பல உரிமைகளை அனுபவித்தனர். தலைக்கோலியர் என்பது தலைசிறந்த ஆடல் மகளிர்க்கு அளிக்கப்படும் விருதுப்பெயராகும். தலைக்கோல் பெறும் மரபை சிலம்பு விவரிக்கின்றது.

பகைமன்னன் புறமுதுகிட்டு ஓடும்போது விட்டுச்செல்லும் வெண்கொற்றக்குடையின் காம்பிலிருந்து எடுக்கப்பட்ட கோலில் நவமணிகளும், பொன் வளையல்களும் பதித்து, சயந்தனாக அதனைப் போற்றி வழிபட்டு, மன்னனால் அளிக்கப்படும் இக்கோலே தலைக்கோல் என்பதாகும். இது ஆடற்கலையில் முற்றும் துறைபோகிய கலைஞர்க்கே அளிக்கப்படும் உயர் விருதாகும்.

இத்தகைய பெருமை மிகு விருதினைப்பெற்ற பல தலைகோலியர் பணிபுரிந்த திருக்கோயில் ஆரூர் திருக்கோயில். மாமன்னன் முதலாம் இராஜராஜன் தான் எடுப்பித்த தஞ்சைப் பெருங்கோயிலில் நானூற்று இருபது ஆடல் மகளிரை இக்கலை வளர்க்க நியமித்தான். இவ்வகையாக நியமிக்கப்பட்டத்தளிச்சேரி பெண்டிரின் ஊரும் பேரும் கல்லில் பொறித்தான். இவ்வாறு இம்மன்னவன் தஞ்சை திருக்கோயிலுக்காக சோழ மண்டலம் முழுவதிலிருந்துத் தேர்ந்தெடுத்த 420 மகளிரில் 51 பேர் திருவாரூர் திருக்கோயிலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதை அறியும்போது ஆரூர் வளர்த்த இக்கலையின் பெருமை நன்கு விளங்கும்.

மேலும் ஆரூர் திருக்கோயிலில் ஆடற்பணி புரிந்த நங்கை ஒருத்தி திருமறைக்காட்டு ஈசனுக்கு நந்தாவிளக்களித்து அதற்கென தொண்ணூறு ஆடுகளையும் வைத்த செய்தியினை மறைக்காட்டுக் கல்வெட்டொன்று கூறுகிறது. இவ்வாறு சோழப் பெருமன்னர்கள் காலத்தில் ஆரூர் திருக்கோயிலில் ஆடற்கலை போற்றிப் பேணப்பட்டது என்பதையும், ஆடற்கலைஞர்களின் சமுதாய நிலை மிக்கோங்கி இருந்தது என்பதையும் கல்வெட்டுக்கள் சிறப்பாகக் கூறுகின்றன.

ஆடற்கலையின் நூற்றுஎட்டு கரணமுத்திரைகளையும் விளக்கும் சிற்பங்கள் கீழைத்திருக்கோபுரத்தில் மூன்றாம் குலோத்துங்கனால் எடுக்கப்பட்டது. சோழர்களுக்குப் பிறகு நாயக்கர்களும், மராத்தியர்களும் இக்கலையைப் பேணினர் என்பதனைச் சிற்பங்களும், ஓவியங்களும், கல்வெட்டுக்களும் காட்டுகின்றன. மராத்தியமன்னன் சகஜி சங்கரபல்லக்கி சேவாபிரபந்தம் போன்ற பல நாட்டிய நூல்களை யாத்து ஆரூர் இறைவனுக்கு அர்ப்பணித்தான். ஆடற்கலை வளர்த்த பாங்கிலும் ஆரூரின் பெருமை அளவிடற்கரியதே.

இசை வளர்த்த ஆரூர் :

ஆரூரின் சிறப்பு இசைக்கருவிகள் மூன்று, அவை பஞ்சமுக வாத்தியம் எனும் ஐம்முக முழவம், சுத்தமத்தளம், பாரிநாதஸ்வரம் என்பதாகும். குட பஞ்சமுகி எனும் பஞ்சமுக வாத்தியம் கி.பி. 12-ம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் - சோழமண்டலத்தில் மட்டுமே தோன்றிய தாளக்கருவி. இதனை யாமளதந்திரம் போற்றும் பாரசைவர்களே இயக்குவர். முட்டுக்காரர் எனும் இம்மரபினர் சிவ பெருமானின் நிருத்தத்திற்காகவே இதனை இசைப்பர். இக்கருவியின் ஐந்து முகங்களையும் சதாசிவனுடைய ஐந்து முகங்களாகப் போற்றுவர்.

24

சோழர்கள் காலத்தில் பலதிருக்கோயில்களில் இருந்த இந்தத் தாளக்கருவி இன்று அருகி மறைந்துவிட்டது. ஆரூரில் மட்டுமே காமிகாகம பூஜைகளுக்கும், விழாக்களுக்கும் மட்டுமே இசைக்கப்படுகிறது.

இதனை இயக்கும் ஒரே கலைஞர் சங்கரமூர்த்தி முட்டுக்காரர் என்பவர். இவரிடமுள்ள பாரசைவ உற்பத்தி - பஞ்சமுகவாத்ய லக்ஷணம் எனும் கிரந்த நூல் - இக்கருவி பற்றிய செய்திகளையும் பாரசைவர்களின் தீட்சை விதிகளையும் பற்றி விவரிக்கின்றது.

இதனைப்போன்றே சுத்த மத்தளம் எனும் தாளக்கருவியும், பாரி நாதஸ்வரம் எனும் குழலும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. மிகப்பெரிய பாரி நாதஸ்வரத்தில் மரபு வழியைப்பேணி குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட பண்களையே வாசிக்கின்றனர்.

தனிச் சிறப்புடைய இசைக் கருவிகளைப் பெற்ற திருக்கோயிலாக மட்டுமின்றி இசையின் அடிப்படையில் நூற்றுக்கு மேற்பட்ட இலக்கியங்களைப் பண் மொழிகளில் மலரச்செய்த திருக்கோயில் ஆரூர் ஆகும். கர்நாடக இசையின் மும்மூர்த்திகள் எனும் தியாகைய்யர், முத்துசாமி தீட்சிதர் மற்றும் சியாமா சாஸ்திரிகள் பிறந்த ஊர் ஆரூர் என்பதோடல்லாமல் அவர்கள் போற்றிப்பரவியதும் ஆரூர் திருக்கோயிலையே என்பதும் சிறப்பு அம்சங்களாகும். ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிருதிகளை யாத்த தஞ்சை மன்னன் சகஜி மன்னன் தன்குலத் தெய்வமாகப் போற்றி பரவியதும் ஆரூர் தியாகராசரையே ஆகும்.

இலக்கிய வளம் :

இலக்கியம் வளர்த்த பாங்காலும் ஆரூர் திருக்கோயில் சிறப்பிடம் வகிக்கின்றது. தமிழ், வடமொழி, தெலுங்கு மற்றும் மராத்தி மொழிகளில் இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை மலரச் செய்த பெருமை ஆரூர் திருக்கோயிலுக்கு மட்டுமே உரியது. சைவத்திருமுறைகள் மட்டுமின்றி பல புராணங்கள், கோவை பள்ளு, மணிமாலைகள், பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, துறைக்கோவை அந்தாதி போன்ற பலவகைத் தமிழ் நூல்களும், புராணம், மான்மியம், கீர்த்தனம், அஷ்டகம் போன்ற வடமொழி மராத்தி நூல்களும் பதம் நாடகம் ஆகிய அமைப்புகளில் தெலுங்கு நூல்களும் மலர்ந்தன. இந்நூல்கள் அனைத்தும் தியாகேசன் மற்றும் புற்றிடங்கொண்ட பரமனின் புகழைப்பேசும் நூல்களே. அண்மையில் கிடைத்த "மனுநீதிச்சோழன் மகாராஜா நாடகம்" எனும் தமிழ்இசை நாட்டியச் சுவடி நூல் ஆரூரின் பெருமைபேசும் அரிய நூலாகும்.

செப்புத் திருமேனிகள் :

நூற்றுக்கும் மேற்பட்ட செப்புத்திருமேனிகள் இத்திருக்கோயிலில் இடம் பெற்றுள்ளபோதும், இவை பெருமளவு பிற்காலத்தியவையாகும். அறுபத்துமூவர் திருமேனிகள் பெயர் பொறித்து காணப்படுகின்றன. சண்டேசர், சோமாஸ்கந்தர், விநாயகர் அமர்ந்த கோல உமையம்மை

ஆகியவை முற்காலச் சோழர்களின் எழிற்படைப்புகளாகும். சோழர்கள், விஜயநகர மன்னர்கள், தஞ்சை நாயக்கர்கள் மராத்தியர்கள் கால கலைப்பாங்குடைய பல திருமேனிகள் இடம் பெற்றுள்ளன.

செப்பேடுகளும் - ஓவியங்களும் :

விஜயநகரப் பேரரசர்கள், நாயக்கர்கள் மற்றும் மராத்தியர்கள் காலச் செப்பேடுகள் பல ஆரூர் திருக்கோயிலிலும், சென்னை அருங்காட்சியகத்திலும் இடம் பெற்றுள்ளன. இவை அனைத்தும் நிவந்தங்கள் பற்றிக் குறிப்பிடுபவையாகும் தில்லைக்கோயிற்பற்றி பேசும் செப்பேடுகளும் உள்ளன.

இவற்றில் பெரும்பாலான செப்பேடுகளில் செப்பேட்டு ஓவியங்கள் உள்ளன. இவற்றில் குறிப்பிடத்தகுந்தவை சகஜி, முதலாம் சரபோஜி காலத்திய செப்பேடுகளாகும். சகஜிமன்னன் அவனது உடன் பிறப்புகள் இருவர் மற்றும் அருணாசலப்பண்டாரம் ஆகியோர் தியாகராஜப்பெருமான் முன்பு வணங்கிய வண்ணம் நிற்கும் காட்சி வடிக்கப்பட்டுள்ள செப்பேடும், சரபோஜி மன்னன் தில்லை நடராஜனையும் கோவிந்தராஜப்பெருமாளையும் வணங்கும் காட்சி வடிக்கப்பட்டுள்ள செப்பேடும் செப்பேட்டு ஓவியக் கலையின் திறம்பேசும் சிறந்த செப்பேடுகளாகும்.

கல்வெட்டில்.......அரசியல்-சமுதாயப் பண்பாட்டுக்கூறுகள்

1. முதலாம் இராஜேந்திரனும், பரவைநங்கையும் :

கங்கை முதல் கடாரம் வரை வென்ற மாமன்னன் முதலாம் இராஜேந்திரனின் உள்ளங்கவர்ந்த நங்கை பரவை தன் இறுதிக் காலம் வரை தன்னையே ஆரூர் கோயிலுக்கு அர்ப்பணித்தாள். மாமன்னன் தனது பட்டமகிஷிக்குரிய இடத்தை இந்நங்கைக்கும் அளித்துச் சிறப்பித்தான். ஆரூர் திருக்கோயிலில் வீதிவிடங்கப் பெருமானின் கோயிலைக் கற்றளியாக்க விரும்பிய நங்கை பரவையின் வேண்டுகோள் மன்னனால் செயலாக்கப்பட்டது. மேலும் கற்றளிமேல் செம்பும், பொன்னும் போர்த்தப்பட்டது. முன்மண்டபங்களும், தூண்களும், செப்புத்தகடுகளால் எழிலுடன் செய்யப்பெற்றன. இக்கற்றளியின் மங்கலவிழாவன்று மாமன்னனும் நங்கைபரவையும் தேரில் அமர்ந்து திருவாரூர் வீதியில் பவனி வந்தனர். ஆரூரின் முன்பு இருவரும் நின்று வணங்கிய இடத்தில் நிற்குமிடந்தெரியும் குத்துவிளக்கு ஒன்றும் மன்னனது ஆணையால் வைக்கப்பட்டது.

"பச்சைப்பாவை உமைநங்கை - பாவை சரியா முலை நங்கை" என்ற பெயரில் இரண்டு குத்துவிளக்குகளும், எண்ணிலா அணிகலன்களும் நிலமும், நிவந்தங்களும் ஆரூரானுக்கு அளித்தார் அனுக்கியர் பரவைநங்கை பரவைநங்கை மீதுகொண்ட அன்பால் மாமன்னன் பரவையும் (பனையவரம் என்று விழுப்புரம் அருகிலுள்ள ஊர்) எனும் ஊரையும் பரவை ஈஸ்வரமுடைய மகாதேவர் திருக்கோயிலையும் எடுத்தான்.

இராஜேந்திர சோழனின் மறைவிற்குப் பின்பும் பரவையின் தொண்டு ஆரூரான் திருக்கோயிலில் தொடர்ந்தது. இந்நங்கையின் விருப்பத்திற்கேற்ப மன்னனின் மைந்தன் முதலாம் இராஜாதிராஜன் ஆரூர் திருக்கோயிலில் ஓர் பெருமண்டபம் எடுத்தான். அதற்கு இராஜேந்திர சோழன் திருமண்டபம் என பரவை நங்கையின் விருப்பப்படியே பெயரும் இட்டான்.

ஆரூர் திருக்கோயிலுக்கு மன்னர்கள் அளித்த அறக்கொடைகளை எல்லாம் மிஞ்சும் அளவு கொடை நல்கிய பெருமை நங்கை பரவைக்கே உரியதாகும்.

நங்கை பரவையும் - மாமன்னன் இராஜேந்திர சோழனும் இறைவனை வணங்கும் கோல கற்படிமம் எடுத்து அதற்குப் பூசனை நிவந்தங்களும் அளித்தனர். மன்னனின் மைந்தர்களான முதலாம் இராஜாதிராஜனும், இரண்டாம் இராஜேந்திரனும், இதனையொத்த படிமம் பரவைபுரத்திலும் எடுக்கப்பட்டது.

ஒரு பட்டமகிக்ஷிக்குக் கிடைக்காத பெரும்பேரு நங்கை பரவைக்குக் கிடைத்தது. தனது உளம்கவர்ந்த நங்கையை மாமன்னன் போற்றியது வியப்பில்லை. ஆனால் மன்னனின் மைந்தர்கள் கூட சிலை எடுத்து அந்நங்கையை தெய்வமாகப் போற்றியது குறிப்பிடத்தக்கதாகும். தனது ஒழுக்கத்தால் சீரிய தொண்டால் பரவைநங்கை பெற்ற பேரு சோழர் வரலாற்றில் யாருக்கும் கிடைக்கவில்லை. இத்தனைச் செய்திகளும் ஆரூர் தியாகப்பெருமான் திருக்கோயில் கல்வெட்டுக்களிலும், பனையவரம் கல்வெட்டுக்களிலும் அழியாத உயர்காவியமாக இன்றும் திகழ்கின்றது. இராஜேந்திரன் - பரவை நங்கை படிமமும் ஆரூரில் திகழ்வது குறிப்பிடத்தக்கதாகும்.

௨. மனுநீதிச் சோழனின் மாகாவியம் :

சேக்கிழார் தம் திருத்தொண்டர் மாக்கதையில் குறிப்பிடும் மனுச்சோழனின் காவியம் சற்று விரிவாக புதிய செய்திகள் பலசுமந்து ஆரூரில் கல்வெட்டாகத் திகழ்கின்றது. சேக்கிழாரின் காவியத்திற்கும் காலத்தால் முற்பட்ட இக்கல்வெட்டு விக்கிரம சோழன் காலத்தியது. இதில் மனுச்சோழனின் மகனது பெயர் பிரியவருத்தன் என்றும் மனுவின் அமைச்சரின் பெயர் பாலையூரினன் உபயகுலாமலன் என்றும் குறிக்கப்பெற்றுள்ளது.

மேலும் உபயகுலாமலனின் வமிசத்தினனான பாலையூர் உடையான் சந்திரசேகரன் ஆகிவிடங்களான குலோத்துங்க சோழமாபலிவானாதிராயன் என்பவருக்கு விக்கிரச்சோழன் அளித்த பரிசில்கள் பற்றி விளக்குகின்றது இக்கல்வெட்டு.

3. இரண்டாம் குலோத்துங்கனின் மனநிலை :

ஆரூர் திருக்கோயிலில் உள்ள இரண்டாம் குலோத்துங்கனது கல்வெட்டுக்களை நோக்கும்போது இம்மன்னவன் சைவத்தின்பாலும் சேக்கிழார் திருத்தொண்டர் மாக்கதையிலும் செலுத்திய ஈடுபாடு நன்கு விளங்குகின்றது. இவனது துவக்க கால மெய்க்கீர்த்திகள் பொற்கோட்டிமையப் பாவையும் சிவனும் போல் என்று கூறி தன்னையும் தந்தேவியையும் நேராகவே சிவனுக்கும் உமையவளுக்கும் ஒப்பிடுகிறான். சேக்கிழாரால் சிவநெறியூட்டப்பட்டு சற்று மன முதிர்வு எய்திய நிலை வந்தவுடன் இவனது கல்வெட்டுக்கள் பொற்கோட்டு இமயப்பாவையுடன் வீற்றிருக்கும் சிவனருளால் சோழநாட்டைத்தான் தன் தேவியுடன் ஆட்சி புரிவதாகச் சொல்லிக் கொள்கிறான்.

பின்னர் சேக்கிழாரின் திருத்தொண்டர் மாக்கதை தில்லையில் இயற்றப்படுகிறது. கி.பி. 1139-40 ல் இம்மாக்கதையாக்கப் பெறும் போது சேக்கிழாரால் பெரிதும் மனமாற்றம் கொண்ட இம்மன்னவன் உடன் ஆரூர் சென்று மூவர் முதலியர்க்கு கோயில் எடுத்து அனபாயநல்லூர் என்னும் ஊரைக் காணிக்கையாக்குகின்றான். இதனைக் குறிப்பிடும் கல்வெட்டில் தன்னை திருநடம்புரியும் சபாபதியின் திருவடிகளாகிய தாமரை மலரை மொய்க்கும் வண்டு என்று தன்னைக் கூறிக்கொள்கிறான். 21

முதலில் சிவனுக்கு நிகரென கூறிக்கொண்டவன் பின்னர் அருளால் ஆள்வதாகக் கூறி இறுதியில் வண்டாகிய எளிய நிலைக்கு தன்னை கருதிக் கொள்ளும் மனப்பாங்கை ஆரூர் கல்வெட்டுக்கள் சிறப்பாகக் கூறுகின்றன.

சோழர்தம் நீதி - நிர்வாகம் :

மனுநீதிச்சோழனின் மாக்கதை சோழர்தம் நீதிக்குச்சிறந்த எடுத்துக்காட்டாக இருந்தபோதும் பிற்காலச் சோழர்கள் காலத்தில் நிகழ்ந்த ஓர் நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். விக்கிரமசோழன் காலத்தில் திருக்கோயில் ஊழியர்களுக்கு வீட்டுமனைகள் அளிக்கப்பட்டன. இரண்டாம் இராஜராஜன் காலத்தில் நகரத்து செட்டிகளாலும், செக்கார்களாலும் கைக்கொள்ளப்பட்டு அவர்களே அனுபவித்தனர்.

ஆலய ஊழியர்கள் தங்கள் மனைகளை இழந்தது இரண்டாம் இராஜராஜன் காலத்தில் அம்மையப்பன் பல்லவராயன் என்ற அமைச்சரால் கண்டுபிடிக்கப்பட்டு, மன்னனது கவனத்திற்கு வந்தது. இதனை ஆராய்ந்த மன்னனும், அமைச்சரும் முன்னர் விக்கிரம சோழன் காலத்தில் அளிக்கப்பட்ட மனைகளை மீண்டும் ஊழியர்களுக்கு மீட்டுத்தந்ததோடு அவர்கள் இதுவரை அனுபவிக்காமல் இருந்ததற்காக சட்டவிரோதமாய்

அனுபவித்தவர்களிடமிருந்து தண்டம் பெற்று அதனை ஈட்டுத்தொகையாக ஆலய ஊழியர்களுக்கு அளித்தனன். மேலும் அவ்விடத்தை அனுபவித்து வந்த நகரத்தார்க்கும், செக்கார்க்கும் வேறு இடமும் உதவிகளும் செய்தது சோழர்களின் நீதி, நிர்வாகத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

சபையினர் செய்த முடிவு :

ஆரூர் திருக்கோயில் மண்டபங்களில் ஊர்ச்சபையினர் மட்டுமின்றி சுற்றுப்புறச் சபையினரும் கூடிப் பல சமுதாய முடிவுகளை எடுத்ததற்கான பல கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. கி.பி. 12-13 ம் நூற்றாண்டு எழுத்தமைதியில் வெட்டப்பட்டுள்ள சிறந்த கல்வெட்டொன்றில் ஆரூர் திருக்கோயிலில் பல ஊர்ச்சபை நிர்வாகிகளும் சான்றோர்களும் கூடிச் சமுதாயத்தில் திகழும் கலப்பின மக்கள் பற்றி முடிவெடுத்தனர். ஸ்மிருதி போன்ற நூல்களை மேற்கோள்காட்டி உயர்ந்த தாழ்ந்த இனங்களின் கலப்பால் தோன்றிய மக்களை வகைப்படுத்தி அவர்கள் சமுதாயத்தில் கீழ்நிலையை அடையக்கூடாது என்ற நோக்கத்தால் அவர்களுக்கு அனைத்துச் சமுதாய உரிமைகளையும் அளித்துத் திருக்கோயில்களில் பலவிதமான பணிகள் புரிய நியமித்தனர். குறிப்பிட்ட ஒரு சமுதாயம் தாழாமல் நன்நிலைப்படுத்திய ஆரூர் சபையினர் எடுத்த முடிவு சோழர்காலச் சமுதாய நிலையைப்பற்றி அறிய சிறந்த ஒரு சான்று.

இதனையடுத்த பல நூற்றுக்கணக்கான செய்திகள் சோழர்கால அரசியல் சமுதாயம் மற்றும் பண்பாட்டுக்கூறுகளைத் தெளிவாகக் கூறும் சான்றுகளாக ஆரூர் திருக்கோயில் உள்ளது.

மூன்றாம் குலோத்துங்கனை ஆரூர் இறைவன் நம் தோழன் என்றும் குறிப்பிடுதல் இறைவனே பேசுவதுபோன்று வெட்டப்பட்டுள்ள மன்னனது ஆணைகள். திருபுவன வீரதேவன் என்ற குலோத்துங்கனது விருதைக் குறிப்பிடும் முதல் கல்வெட்டு சுந்தரருடைய தாயார் இசைஞானியார் என்பவர் ஆரூரில் பிறந்தவர் என்ற குறிப்பு வேட்கோவர்கள் (குயவர்) கூட ஆரூர் கோயில் கணக்கு அதிகாரியாகப் பணிபுரிந்த சான்று, சோழ பாண்டிய விஜயநகர நாயக்கர் மற்றும் மராத்திய அரசர்களின் ஆணைகள் போன்ற பலமுக்கிய செய்திகளை சுமார் 75 கல்வெட்டுக்கள் சுமந்து நிற்கின்றன.

சத்திரிய சிகாமணி வளநாட்டு திருவாரூர் கூற்றத்துத் திருவாரூர் திருக்கோயில் தமிழகத்துத் திருக்கோயில்களில் வரிசையில் தலையாய பெருமை உடையது என்பதில் ஐயமேயில்லை.

தலபுராணக் கதைகள் :

வடமொழி தமிழ் மராட்டி ஆகிய மொழிகளில் இத்தலத்திற்குப் பல புராணக் கதைகள் உள்ளன. வன்மீகநாதர் தியாகராஜர் ஆகிய இரண்டு மூர்த்திகள் பற்றிய கதைகள் உள்ளன. வன்மீகநாதர் தியாகராஜர் ஆகிய இரண்டு மூர்த்திகள் பற்றிய தலபுராணக் கதைகள் பின்வருமாறு உள்ளன.

வன்மீகநாதரைப் பற்றிய வரலாறுகள் :

முற்காலத்தில் திருமால், இந்திரன் முதலிய தேவர்கள் ஒருங்குகூடி ஒரு யாகம் செய்ய எண்ணினர். குருக்ஷேத்திரமே தக்க இடம் என்று துணிந்தனர். இந்த யாகத்தை இறுதிவரையில் இளைக்காமல் இயற்றுபவரே எல்லாரிலும் உயர்ந்தவரென்று சபதம் செய்தனர். அவ்யாகத்தில் இந்திரன் முதலியோர் தோற்றனர். விஷ்ணு வென்றார். செருக்குற்றார். அதை அடக்க முன்னவன் அருளால் ஓமகுண்டத்தில் ஒரு வில் உண்டாயிற்று. அதனை எடுத்து வளைத்துக்கொண்டு தேவர்கள் எல்லோரையுமே அடக்கியாள எண்ணி அவர்களைத் துரத்திச் சென்றார். பராசத்திபுரம் என்னும் இத்தலத்தை அடைந்தார். இறைவி திருவருளால் அவர் வலியெலாம் ஒடுங்கியது. வில்லைத் தரையிலூன்றி அதன் மேல் தன் தலையைச் சாய்த்து அயர்ந்து அறிவு சோர்ந்தார். சமயம் நோக்கிய தேவர்கள் தமது குருவாகிய வியாழனை ஆலோசனை கேட்டனர். அவர் உத்தரவுப்படி தேவர்கள் யாவரும் வில்லின்கீழ்ச் செல்லுருவமாகிப் புற்றில் அமர்ந்து நாணை அரித்து அறுத்தனர். அப்போது வில் நிமிர விஷ்ணுவின் தலை தெறித்தது. தேவர்கள் அஞ்சினர். ஆடகேசத் திருநாமத்தோடு பாதாளத்து எழுத்தருளிய பரமன் புற்றிடங்கொண்டு சிவலிங்கமாகக் காட்சி தந்தார். இந்திரனும், பிரமனும் வணங்கித் தோத்திரம் செய்தனர். இறைவன் சிவலிங்கத் திருமேனியிலிருந்து வெளிப்படத் தேவர்கள் வழிபட்டனர். அபயம் வேண்டினர். இறைவனும் செருக்குக்கொண்ட திருமால் தலையை உடலோடு பொருத்துங்கள் என்ன அவ்வாறே செய்து, அத்திருமாலையும் பெற்றனர். பின்னர்த் திருமால் முதலிய தேவர்கள் ஆகம முறைப்படி வழிபாடு செய்து எல்லா இன்பங்களையும் எய்தினர். இதுவே புற்றிடங்கொண்ட பெருமானது தோற்ற வரலாறு என்று கூறப்படுகின்றது.

மற்றும் திருமகள் கடலரசனாகிய வருணனிடத்து வளர்ந்து வந்தாள். திருமால் மதுகைடபர் என்ற அசுரர்களை வென்ற வரலாற்றைக் கேட்டு அவரையே மணந்துகொள்ளவேண்டும் என்று இத்தலம் அடைந்து திருமூலட்டானேசுவரரை வழிபட்டுத் தவம் செய்து வந்தனள். இறைவன் காட்சி தந்து அவ்வாறே வரமீந்தனர். திருமகள் என் பெயரால் இந்நகரம்


வழங்கவேண்டும் என்ற வரமும் கேட்டனள். அது முதல் இத்தலம் கமலாலயம் என்று அழைக்கபெறுகிறது. ஒரு காலத்தில் கோடி முனிவர்கள் வந்து தரிசித்தபொழுது வன்மீகநாதர் கோடியளவான திருவுருவங்களைக்கொண்டு காட்சியளித்தனர். முனிவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி வழிபாடாற்றினர். சிவப்பேறெய்தினர்.

திலீபன் மகனாகிய அசன் என்னும் அரசன் நால்வகைச் சேனையுமின்றி அரசாளும் முறை என்ன என்று குல குருவாகிய வசிட்டனை வினவினான். அதற்கு அவர் திருவாரூர் சென்று வன்மீகநாதரை வழிபட்டு அவரருளால் துர்க்கையை நிலைபெறுவித்து வழிபாடு செய்யின் முடியும் என்று கூறினர். அசன் அவ்வாறே செய்தான்.

அசன் மகனாகிய தசரதன் ஆட்சிக்காலத்தில் உரோகிணி நட்சத்திரத்தை ஊடறுத்துச் சனி செல்வதைச் சோதிடர் மூலமாக அறிந்து சனியைத் தடுக்கவெனச் சனி மண்டலத்தை அடைந்தான். சனியைக் கண்டு தேவரீர் உரோகிணியை ஊடறுத்தால் உலகம் பஞ்சம் எய்தும் ஆதலால் நூற்றுநான்கு யுகம் வரையும் உரோகிணியை ஊடறுத்தல் ஆகாது. என் வார்த்தையை மீறின் என்வாளுக்கு இரையாவீர் என்றான். சனி அரசன் துணிவைக் கண்டு மெச்சிக் கருணைகூர்ந்து அவன் வேண்டிய வரத்தையும் மற்றும் பல வரங்களையும் கொடுத்தான்.

இதனையறிந்த இந்திரன் தசரதன் நட்பைப்பெற வேண்டித் தன் உலகிற்கு அழைத்து விருந்தியற்றி உனக்கு ஏதாவது குறையுள்ளதோ என்றான் என்னரசாட்சி இனிமையாய்ச் செல்லுகின்றது. ஆனால் பிள்ளையில்லாக்குறை பெரிதாயிருக்கின்றது. என்றான் அப்படியாயின் கமலாலயம் சென்று வன்மீகநாதரை வழிபட்டால் நீ எண்ணியது எய்துவாய் என்ன தசரதன் அவ்வாறே வந்து வழிபட்டு இறைவன் அருள்பெற்றுச் சென்று யாகஞ் செய்து இராமன் முதலிய நால்வரையும் பெற்று இன்பம் எய்தினான்.

அவ்வாறே சித்தீசன் என்னும் அரசனும் புத்திரப்பேறு எய்தினான். குலிசேசன் என்னும் அரசன் பாரணைப் புண்ணிய காலத்தில் துருவாச முனிவருக்கு ஊன் கலந்த சோற்றையிட்டான். துருவாசர் சபித்தார். அச்சாபத்தை இத்தலத்து வன்மீகநாதரை வழிபட்டுப் போக்கியுய்ந்தான். அவ்வாறே மன்மதன், மேனகை முதலியவர்களும் வழிபட்டுச் சாபம் நீங்கினர். பசுவைத் தேடிக்கொண்டு வணிகன் ஒருவன் வன்மீகரை வலம்வர அதனால் மறுமையில் மன்னனாயினான் இராமன், குசன், லவன், சமற்காரன் என்னும் அரசன், கோகருணர் என்னும் முனிவர் ஒருவர் கேமசருமன் முதலியவர்களும் வழிபட்டுப் பேறுபெற்றனர்.



தியாகேசர் வரலாறு :

திருமால் தனக்கு ஒரு அழகிய மகன் வேண்டுமென்று விரும்பினார். குறையெல்லாம் நிறைவிக்கும் பெருமானிடம் வேண்டிக் கடுந்தவம் மேற்கொண்டார். வெயிலிலும், மழையிலும் பெரிய நீலமலை போல அசையாது நின்று கடுந்தவஞ் செய்தனர். அதன் பயனாக இறைவன் திருவருட்சத்தியோடு வெளிப்பட்டனர். கண்ட திருமால் துண்ணெனத் திடுக்கிட்டு இறைவா வேண்டுவோர்க்கு வேண்டுவதேயீயும் விண்ணவர் தலைவ! அடியேனும் தேவரீர் திருவருளால் உலகப் பாதுகாப்பு முதலிய எல்லா நன்மைகளையும் எய்தினேன் ஆயினும் பிள்ளையில்லாக் குறை பெரிதாயிற்று. அதனைத் தீர்க்க அழகிய புத்திர பாக்கியத்தை அருளுதல் வேண்டும் என்றனர். பெருமானும் பேரருள் கூர்ந்தார். ஆனால், திருமால் இடப்பக்கத்து இருக்கின்ற உமாதேவியை வணங்கவில்லை. அதனால் உமாதேவியார் சிறிது சினங்கொண்டு இறைவன் திருவருளால் நீ புத்திரனை யெய்தினும் அவன் விதிவலியால் வலிய அழிக என்று சாபங்கொடுத்துப் பின்பு பெருமானையும் அழைத்துக்கொண்டு விரைந்து மறைந்தருளினார். திருமால் கவன்று செய்வது இன்னதென்று அறியாது நிற்கையில் திருவருள் உண்ணின்று உணர்த்த ஒரு எண்ணம் உண்டாயிற்று. அவ்வெண்ணப்படியே சிவபெருமானையும், உமா தேவியாரையும் குமாரக் கடவுளையும் ஒரே ஆசனத்தில் எழுந்தருளுவித்து ஆகம விதிப்படி அரிய பூசனை செய்துவந்தனர். பூசனைக்குகந்த பெருங்கூத்தர் விடையின்மேல் அருள் உருக்கொண்டு வெளிப்பட்டுக் காட்சியளித்தனர். திருமால் கந்தனையும், அம்மையையும், அப்பனையும் முறையே வணங்கினர். மகிழ்ந்த மஹேஸ்வரி என் சாபம் தடைபடாது. ஆனால் நின்மகன் இறைவன் நெருப்புக் கண்ணால் வெந்து பின் பிழைப்பான் என்று சாபவிடை தந்தனள் மகிழ்ந்த திருமால் இதே சோமாஸ்கந்தத் திருக்கோலத்தோடு தேவரீர் எப்பொழுதும் எழுந்தருளி இன்னருள் புரிதல் வேண்டும். இந்த உலகம் முழுதும் உய்தல் வேண்டும் என்று வேண்டினர் அவ்வாறே இறைவர் அருள் பாலித்தனர். பின்பு திருமால் தன் நெஞ்சக் கோயிலில் அம்மூர்த்தியை நிறுவி வழிபாடாற்றி வந்தனர். திருமாலின் நெஞ்சகத்து எழுந்தருளி உச்சுவாத நிச்சுவாசித்தால் (மூச்சுக்காற்றை உள்ளிழுத்தலும் வெளி விடுதலும்) ஆகிய அசைவால் பெருமானும் அசைந்தாடி ஆனந்தங்கொண்டு திருமாலுக்குத் திருவருள் கரந்து விளங்கினர். இந்த நடனம் அஜபா நடனம் எனப்படும்.

அப்போது தேவலோகத்தை அசுரர்கள் சூழ்ந்து வருத்தத் தொடங்கினர். கொள்ளையடித்தனர். கொடுமை புரிந்தனர். இந்திரன் திருமாலைக் காணப் பாற்கடலை அடைந்து அவரிடம் நிகழ்ந்த யாவையுங் கூறினான். இந்தப் பெரிய துன்பம் எப்போது கழியுமோ? என் செய்வேன்! என்று ஏங்கினான். இரங்கிய திருமால் என் உயிருக்குயிராக இருக்கின்ற ஒரு பரம்பொருளைத் தருகின்றேன். அதனை நீயும் வைத்து அன்பு குறையாது பூசனை செய்து வந்தால், பெருமானருளால் வெற்றி கிடைக்கும் என்றருளிச்செய்து சோமாஸ்கந்த மூர்த்தியாகிய இறைவனையும் ஈந்தனர். பெற்றுக்கொண்ட இந்திரன் வழிபாடு செய்த அவுணர்வாரை அகலப்பெற்றான். இளப்பிலா மகிழ்ச்சியால் சோமாஸ்கந்த மூர்த்தியையும் வழிபட்டு வந்தனன்.

அப்போது திருவாரூர் செய்த பெருந்தவத்தால் மீண்டும் வலன் என்னும் அசுரன் ஒருவன் வானுலகில் படையெடுத்து வந்து இந்திரனோடு போர் செய்து தோற்றோடச் செய்தனன்.

இது இங்ஙனமிருக்க பூமியில் நீர்வளம் செறிந்த சோழ நாட்டின் தலைநகரமாகிய திருவாரூரில் முசுகுந்தன் என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவன் முற்பிறவியில் ஒரு குரங்காகத் திருக்கைலாயத்திலுள்ள பூஞ்சோலையில் சுற்றித் திரிந்தவன் இறைவனும் இறைவியும் எழுந்தருளியுள்ளபோது அவர்கள் மேல் வீழும் வண்ணம் வில்வத்தளிரைச் சிந்திவந்தான். அருட்கடலாகிய இறைவன் அறியாது செய்த நற்செயலுக்கும் மகிழ்ந்து மறுபிறப்பில் அரசனாக உலகாளச் செய்தனர். அவனே சோழ அரசனாகிய முசுகுந்தனாக அவதரித்தவன். இம் முசுகுந்தன் இந்திரனுக்கு நட்பினன். திருவருள் கூட்டுதலால் இந்திரன் நம் துணைவனாகிய முசுகுந்தனை அழைத்துவரின் நம் பகை நீங்கும். வெற்றி கிட்டும் என்றெண்ணினன். தூதனையனுப்பி அழைத்துவரச் செய்து துணை வலியாலும் பெருமான் திருவருள் வலியாலும் வெற்றிபெற்றனன். மகிழ்ந்த இந்திரன், முசுகுந்தனை இவ்வுலக வாழ்வு எனக்கு உன்னால் நிலைத்தது. உனக்கு யான் செய்யக்கூடிய கைம்மாறு ஒன்றும் தோன்றவில்லையே என்று உபசார மொழிகள் உரைத்தனன்.

விடைபெற்றுச் சென்று நீராடிப் பூசனை முற்றினன். புகழ் மாலைகளால் போற்றி நின்றனன். அப்போது முசுகுந்தனும் தனது கடன்களை முடித்துக்கொண்டு சென்று தியாகவிநோதரை அரவக்கிண்கிணிக்கா லரசரைக் கண்டு ஆனந்த பரவசனாய்த் தன்னைமறந்து சிவமேயாய்த் திளைத்து நின்றனன். அன்பு வலைப்பட

தியாகப்பெருமான் இந்திரன் அறியாதபடியும் இவன் மட்டும் காணும் வண்ணமும் காட்சியளித்தனர். முசுகுந்தனுக்கு முற்பிறவியின் எண்ணங்களும் செயல்களும் முறையே நினைவிற்கு வந்தன. இன்ப வெள்ளத்து மூழ்கினன். இறைவன் இவன் காதிற்கு மட்டும் கேட்க என்னைத் திருவாரூர்க்கு கொண்டுசெல். பூசனை செய் என்று ஆணை தந்தனர். அரசன் வழிபாடு முற்றி இந்திரனோடு அமுதருந்தியபின் விடைபெற விரும்பினன். இந்திரன் என்னிடம் வேண்டியது யாது? அதைக் கேள் தருகிறேன் என்றனன். அப்படியாயின் நீர் வழிபடும் தியாகப் பெருமானை அளித்திடுக என்று அரசன் வேண்டினன். இந்திரன் இம்மூர்த்தி என்னுடையதன்று திருமால் வழிபட்டது. அவரது அனுமதிப்பெற்றுத் தரல் வேண்டும் என்றனன். முசுகுந்தன் திருமாலைக் கேட்டாயினும் கொடுக்க வேண்டுகிறேன். பெற்றன்றிப் போகமாட்டேனென்று வற்புறுத்திக் கூறினான். இந்திரன் அவ்வாறே பாற்கடல் சென்று திருமால் அனுமதியும் பெற்றுவந்தவனாய் ஆன்மார்த்த மூர்த்தியை அகல மனமில்லாதவனாய் அதுபோன்ற ஆறுமூர்த்திகளைச் செய்வித்து அரசனுக்குக் காட்டினன். திருவருள் துணைசெய்ய முசுகுந்தன் உண்மை உருவைத் தருக எனக் காட்டிக் கேட்டனன். இந்திரன் செய்வதொன்றறியாது திகைத்துச் சிவப்பெருமூர்த்தியை அளித்தனன். முசுகுந்தன் அம்மூர்த்தியைத் திருவாரூர்க்கு எழுந்தருள் வித்தனன். வன்மீகர் திருக்கோயிலுக்குத் தென்பால் திருக்கோயில் அமைத்து அதில் அமர்த்தியருளினான். அங்ஙனம் அவன் எழுந்தருள்வித்த நாள் அத்த நக்ஷத்திரம். ஆதலால் அன்று கொடியேற்றுவித்து விழாக் கொண்டாடினான். பங்குனி உத்திரத் திருநாளில் நீர்விழா நிகழ்த்துவித்தான். முதலில் திருமால் மார்பில் அசைந்தாடிய பெருமானாக இருந்ததை "பைஞ்சுடர் விடுநாகப்பள்ளி கொள்வான் உள்ளத்தானும்" என்ற பகுதியால் அபரடிகள் அறிவிக்கின்றார்கள். அது மட்டுமா? "தேங்காவி நாறும் திருவாரூர்த் தொன்னகரில் பூங்கோயிலுள் மகிழ்ந்து போகாதிருந்தாரே" என்ற தேவாரப் பகுதி இன்றும் கண்கண்ட தெய்வமாகத் தியாகர் விளங்குவதை அறிவிப்பதாகும்.

இன்னும் தியாகர் செல்வத் தியாகரான சிறப்பு அடிக்காயிரம் பொன் கொடுத்தார் என்னும் வரலாற்றானும் பெறப்படும் பொன் பரப்பிய திருவீதியென ஒரு வீதிக்குப் பெயர் வழங்கியதே இதற்கு ஒரு தக்கசான்று இந்நிகழ்ச்சி உற்சவத்தில் தியாகப்பெருமான் தேருக்கு எழுந்தருளும் போது பொன் பூ; வெள்ளிப் பூ இறைப்பதாக நிகழ்ந்து வருகிறது.

அடிக்கோ ராயிரம் பொன் சின்னங்கள் கூற அளிப்பார் எனத் திருவாரூர்க் கோவையினும் அடி ஒன்றுக்கு உய்யும்படி பசும்பொனோராயிர முகந்து பெய்யந் தியாகப் பெருமானே எனத் திருவாரூர் உலாவினும் சிறப்பிக்கப்பெறுதல் காண்க.

சோமாசிமாற நாயனார் தான் செய்யும் யாகத்தில் இறைவனே நேரில் வந்து அவரிப்பாகம் ஏற்றருளும்படி சுந்தரரைக் கொண்டு வேண்டிக்கொண்டார் என்றும் அவ்வாறே இறைவன் உமையோடு பறையர் திருக்கோலமாக எழுந்தருளி ஏற்றுக்கொண்டார். என்றும் வரலாறு ஒன்று காணப்பெறுகின்றது. ஆனால் இவ்வரலாறு பெரிய புராணத்துக் கூறப்படவில்லை. திருக்கடவூர்த் தல புராணத்துக் கூறப்பெற்றுள்ளது. திருமாகாளத் தல புராணம் துணை நிற்கின்றது. தியாகப்பெருமான் அவ்வாறு எழுந்தருளிச் சென்றுலதற்கு அடையாளமாக ஐயடிமங்கலம், அடியக்கமங்கலம், சகடமங்கலம், பொங்குசாராயநல்லூர் என்ற ஊர்ப்பெயர்கள் சான்று பகருகின்றன.

மனுநீதிச்சோழன் நீதியைக் காக்க - பசுத்துயரம் தானடைய - தேர்காலில் மகன் வீதி விடங்கனைக் கிடத்தித் தேருருட்டியபோது தியாகப்பெருமானே விடைமீது தோன்றிக் காட்சி வழங்கி உயிர்ப்பித்தார் என்ற வரலாறு பெரிய புராணத்துக் காணப்பெறுகிறது.

நமிநந்தியடிகள் கனவில் தியாகப்பெருமான் எழுந்தருளித் திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லாரும் சிவகணமாதலைத் தெரிவித்தனர் என்பதும் பெரிய புராணத்துக் காணப்பெறுகிறது. அவ்வாறே விறன்மிண்டர், கழற்சிங்கர் வரலாறுகளும் தியாகப்பெருமானுடைய திருவருள் தொடர்புடையன.

மற்றும் பச்சைக் கற்பூரம் அணிதலும், செவ்வந்தித் தோடணிதலும், செங்கழுநீர்மாலையணிதலும் இறைவனுக்குச் சாத்தப்பெறும் ஆடையில் தியாகர் என்ற பெயர் வரைதலும் பாகற்காய் பறித்தலும் தென்னந்திருவாசல் வழியாகப் பாடுவார் பாடல் கேட்டலும் தியாகர்க்குரிய வழக்கங்களாம்.

தியாகப்பெருமானுக்குரிய பத்துவகை அங்கப்பொருள்களுக்குத் தனிப்பெயர்கள் உண்டு. அவை ஆடுதண்டு - மணித்தண்டு கொடி - தியாகக்கொடி ஆசனம் - இரத்தின சிம்மாசனம் மாலை செங்கழுநீர் மாலை வாள் - வீரகண்டயம் நடனம் - அஜபா நடனம் யானை - ஐராவணம் மலை - இரதனசிருங்கம் முரசு - பஞ்சமுக வாத்தியம் குதிரை - வேதம் நாடு - சோழ

நாடு ஊர் - திருவாரூர் ஆறு - காவிரி பண் பதினெண்வகைப் பண் என்பனவாம். இவற்றின் விரிவும் மேற்கோளும் தனிப் புத்தகத்தில் காணத்தக்கன.

தியாகப்பெருமானைப்பற்றி அசைந்தாடி அகிலமும் ஆட்டுந் தியாகர் ஆடாதும் ஆடிப் பாகற்காய் பறிக்கும் தியாகர் முதலிய பழமொழிகளும் வழங்கி வருகின்றன.

பெயர்கள் :

பல காரணங்களால் தியாகப்பெருமானுக்கு வீதிவிடங்கர் தேவர்கண்டப் பெருமான், தியாகப்பெருமான், ஆடரவக்கிண்கிணிக் காலழகர், செங்கழுநீரழகர், செவ்வந்தித் தோடழகர், கம்பிக்காதழகர் தியாக விநோதர் கருணாகரத் தொண்டமான் (இவை விருதாவளியில் உள்ளன சோழ மண்டல சதகம் பார்க்க) அசைந்தாடும் அப்பர், அடிக்காயிரம் பொன் வழங்கியவர் கமலேசர் செம்பொற்றியாகர், திருந்திறைகோலத்தர், தேவசிந்தாமணி, தியாகசிந்தாமணி, சிந்தாமணி முதலிய அறுபதுக்கு மேற்பட்ட திருநாமங்கள் பிரபந்தங்களிலும் தேவாரத் திருமுறைகளிலும் வழங்குகின்றன.

திருவாரூர் திருக்கோயிலும் நாயன்மார்களும்

1. சுந்தரர் :

மூவர் முதலிகளுள் ஒருவரான ஆலால சுந்தரர் ஆரூரான் என்ற சிறப்புப் பெயர் பெற்றவர். இவரது தாயார் இசை ஞானியார் திருவாரூரில் பிறந்தவர் திருவாரூர் தேவாசிரிய மண்டபத்தில் தியாகேசன் திருவருளால் திருத்தொண்டத்தொகைபாடி தொகையடியார் பெருமையை உலகுக்குக் காட்டி நின்றார். ஆரூர் பரவையாரை மணந்தார்.

2. விறன்மிண்ட நாயனார் :

மலை நாடெனும் சேரநாட்டில் திருச்செங்குன்னூரில் பிறந்த இவர் திருவாரூர் தேவாசிரிய மண்டபத்தில் தங்கி அடியார்களைப் போற்றி வந்தார். ஒருநாள் சுந்தரர் திருவாரூர் பெருமானை வழிபடச் சென்றபோது சிவனடியார்களை வணங்கி வழிபடாது ஒதுங்கிச் செல்வதைக் கண்ட விறன் மீண்டார். சிவனடியார் திருக்கூட்டம் இதனைப் பேணாது ஒதுங்கிச் செல்லும் ஆரூரானுக்கும் அவனா வலிய ஆட்கொண்ட சிவபெருமானுக்கு புறகு (புறம்பானது) என்று கூறினார் பின்னர் சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடியது கண்டு நேசமாகி ஆரூர் பெருமானின் அருள் நலம் பெற்றார்.

3. நமி நந்தியடிகள் :

சோழநாட்டு ஏமப்பேனூரில் பிறந்த இவர் ஆரூர் அரநெறிப் பெருமானுக்கு நாளும் திருவிளக்கேற்றி வழிபட்டு வந்தார். சமணர்கள் வாது செய்த போது நீரால் விளக்கெரித்து ஆரூரான் பெருமையை உலகறியச் செய்தார்.

திருவாரூர் பிறந்தார்கள் அனைவரும் சிவகணங்களே என்பதை ஈசன் உணர்த்த அறிந்த பெருமகனார் இவர்.

4. தண்டியடிகள் :

திருவாரூரில் பிறந்தவர். பிறவிக்குருடர் சமணர்கள் சூது செய்தபோதும் கவலையுறாமல் திருக்குளத் திருப்பணி செய்தவர் நாட்ட மிகு தண்டி என சுந்தரர் போற்றும் பெருமையுடையவர்.

5. சேரமான் பெருமாள் நாயனார் :

நம்பியாரூரரின் தோழராய் விளங்கியவர் திருவாரூர் மும்மணிக்கோவை பாடியவர். ஆறாத சிவந்தொண்டால் சுந்தரருடன் கயிலை சென்றவர்.

6. செருந்துணை நாயனார் :

மருகல்நாட்டு தஞ்சாவூரில் பிறந்த இவர் ஆரூர் இறைவனுக்கு திருத்தொண்டு புரியும் நாளில் பல்லவமன்னன் கழற்சிங்களின் தேவி திருக்கோயில் பூமண்ட பத்து புதுமலரை எடுத்து முகந்ததைக் கண்டு அவளது மூக்கை அரிந்தவர் உறுதிப்பணிபுரிந்து இறையருள் பெற்றவர்.

7. கழற்சிங்கநாயனார் :

காடவர்கோன் கழற்சிங்கரான இம்மன்னவன் தன்தேவியோடு ஆரூர் வந்தபோது அத்தேவி ஈசனுக்குரிய புது மலரை முகர்ந்ததற்காக செருத்துணை நாயனாரால் மூக்கரியப்பட்டாள். இதுகண்ட கழற்சிங்கர் அவள் செய்த தவறுக்கு பூவை எடுத்த கையையன்றோ முதலில் தண்டித்தல் வேண்டும் எனக்கூறி தன் வாளால் அத்தேவியின் கரத்தை தண்டித்தார் மூவரும் ஆரூரான் அருள்பெற்று உய்ந்தனர்.

இவ்வடியார்கள் மட்டுமின்றி திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், மணிவாசகர், திருநீலகண்ட பெரும்பாணர் அவரது தேவியார் மதங்க சூளாமணியார் ஆகிய பலரும் ஆரூரான் அடிபணிந்து போற்றிய பெருமக்கள் ஆவர்.

அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவாரூர்.

1-ம் திருமுறை

சித்தம் தெளிவீர்காள் அத்தன் ஆரூரைப்
பத்தி மலர்தூவ முக்தியாகு மே!
துன்பம் துடைப்பீர்கள் அன்பன் அணியாரூர்
நன்பொன் மலர்தூவ இன்பமாகுமே
சீரூர் சம்பந்தன் ஆரூரைச் சொன்ன
பாரூர் பாடலார் பேராரின்பமே!

2-ம் திருமுறை

மருக்கையானை மத்தகத் ததிக்குலத் துகிர்ப்புக
நெருக்கியவாய நித்திலந் நீர்க்குநீள் பொருப்பனூர்
கருக்கொள் சோலை சூழநீடு மாடமாளி கைக்கொடி
அருக்கன் மண்ட லத்தனைவும் அந்தனாரு ரென்பதே.

3-ம் திருமுறை

அந்தமாயுல காதியுமாயினான்
வெந்த வெண்பொடிப் பூசிய வேதியன்
சிந்தை யேபுகுந் தான் திரு வாரூரெம்
எந்தை தானெனை யேன்றுகொ ளுங்கொலோ.

4-ம் திருமுறை

பாடிளம் பூதத்தி னானும் பவளச்செவ வாய்வண்ணத்தானும்
கூடிள மென்முலை யாளைக் கூடிய கோலத்தினானும்
ஓடிள வெண்பிறை யானும் ஒளிதிகழ் சூலத்தினானும்
ஆடிளம் பாம்பசைத் தானும் ஆரூரமர்ந்த அம்மானே.

5-ம் திருமுறை

எப்போ தும்மிறையும் மறவாது நீர்
முப்போ தும்பிர மன்தொழ நின்றவன்
செப்போ தும்பொனின் மேனிச் சிவனவன்
அப்போ தைக்கஞ்சல் என்னும் ஆரூரனே
மாலும் நான்முக னும்மறி கிற்கிலார்
கால னாய அவனைக் கடந்திட்டுச்
சூல மான்மழு வேந்திய கையினார்
ஆலம் உண்டழ காய ஆரூரரே!

6-ம் திருமுறை

ஒருவனாய் உலகேத்த நின்றநாளோ ஒருருவே மூவுருவமான நாளோ
கருவனாய்க் காலனை முன்சாய்ந்த நாளோ காமனையுங் கண்ணழலால் விழித்த நாளோ
மருவனாய் மண்ணும் விண்ணுந் தெரித்தநாளோமான் மறிக்கையேந்தியோர் மாதோர் பாகந்
திருவினாய் சேர்வதற்கு முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாகக் கொண்டநாளே

7-ம் திருமுறை

பொன்னும் மெய்ப் பொருளும் தருவாளைப் போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னைஎன்பிழையைப் பொறுப்பானைபிழையெலாந்தவிரப் பணிப்பானை
இன்னதன்மையனென்றறியவொண்ணா எம்மானைஎளிவந்தபிரானை
அன்னம்வைகும் வயற்பழனத்தணியாரூரானை மறக்கலுமாமே!

8-ம் திருமுறை

பூங்கமலத்தயனொடுமால் அறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவி முலையாள் கூறாவெண்ணீறாடி
ஓங்கெயில் சூழ் திருவாரூர் உடையானே அடியேன்நின்
பூங்கழல்கள் அவையல்லா தெவையாதும் புகழேனே!

9-ம் திருமுறை

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோறமுத மொத்தவர்க்கே
தித்தியாய் இருக்கும் தேவர்கள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ரு சிவமாய் உலகெலாம் படைத்த
தணிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்தமாய் ஆரூர் ஆதியாய் வீதி
விடங்கராய் நடங்குலாவினரே!

10-ம் திருமுறை

தத்துவம் ஆடச் சதாசிவந்தானாடச்
சித்தமும் ஆடச்சிவ சக்தி தானாட
வைத்த சராசரம் ஆட மறையாட
அத்தனும் ஆடினான் ஆனந்தக் கூத்தன்றே.

11-ம் திருமுறை

காரு முழக்கொடுமின்னொடு வந்தது காதலர்தந்
தேருந் தெருவுஞ்சி சிலம்பப் புகுந்தது சில்வளைகள்
கோருஞ் சில பலவங்கே தெரிந்தன துன்னருநஞ்
சாருமிடற்றண்ணலாரூரனை யவணாங்கினுக்கே!

12-ம் திருமுறை

புற்றிடங் கொண்ட புராதனனைப் பூங்கோயில்
மேய பிரானையார்க்கும்
பற்றிடமாய பரம்பொருளைப் பார்ப்பதி
பாகனைப் பங்கயத்தாள்
அர்ச்சனை செய்ய அருள்புரிந்த அண்ணலை
மண்மிசை வீழ்ந்திறைஞ்சி
நற்றமிழ் நாவலர் கோன் உடம்பால்
நன்மையின் தன்மையை மெய்ம்மை பெற்றார்!


திருப்புகழ்

நீதானெத்தனையாலும் நீடுழிக்ருபையாகி
மாதானத்தனமாக பா ஞானக் கழல் தாராய்!
வேதாமைத்துனவேளே வீராசற்குணசீலா
ஆதாரத் தொளியானே ஆரூரிற்பெருமானே!

கமலாம்பாள் துதி

அறந்தழைய கலைத்தெரி வனப்பெய்தச் சசியெனும் பேரரிவை வாழ
நிறங்கெழு பூமடந்தையொடு நிலமங்கை மங்கலத்தில் நிறைந்து மல்கப்
பிறங்கும் உயிர்த்தொகை யனைத்துங் களிகூறத்தவம் புரியும் பீடுசார்ந்ற
சிறந்த கமலாலய நாயகி செம்பொற் சேவடிகள் சென்னி சேர்ப்பாம்!





அருள்மிகு பதஞ்சலி மனோகரர் திருக்கோயில்,
திருவிளமல்.

அருள்மிகு பதஞ்சலி மனோகரர் திருக்கோயில், விளமல்.

திருவாரூர் தஞ்சை சாலையில் அமைந்துள்ள ஊர் திருவிளமல் திருவாரூரிலிருந்து 2 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது. காவிரியின் தென்கரைத் தலங்களுள் ஒன்றாக அமைந்தது. மக்கள், வழக்கில் விளமல் என்றழைக்கும் திருவிளமல் என்னும் அழகிய ஊர். ஒடம் போக்கி ஆற்றின் தென்கரையில் நின்றிலங்கும் இத்திருக்கோயில் அருள்மிகு பதஞ்சலி மனோகரர் ஆலயமாகும். இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் அருள்மிகு பதஞ்சலி மனோகரர் எனவும் இறைவி அருள்மிகு மதுரபாஷிணி (தேன் மொழியம்மை) எனவும் அழைக்கப்படுகின்றார். கிழக்கு நோக்கிய இத்திருக்கோயிலின் எதிரே அக்கினி தீர்த்தம் அமைந்துள்ளது.

தில்லைக் கூத்தனும், திருவாரூர் கூத்தனும் :

சைவ சமயத்தில் கோயில் என்றழைக்கப்படுவது தில்லை நடராஜர் கோயில். தில்லை ரகசியம் என்றழைக்கபடும் இப்பொன்னம்பலத்தில் ஊழித்தீ காலத்தில் இந்த பிரபஞ்சத்தையும், உயிர்களையும் ஓம்காரத்திற்குள் அடக்கும் சிதம்பரம் நடராஜரின் ஆனந்தத் தாண்டவம் கண்டு மகிழ்ந்து வாழ்ந்து வந்தவர்கள் பதஞ்சலி - வியாக்கரபுரீஸ்வரர் ஆகிய இரு முனிவர்கள்.

சைவ சமயத்தின் பெரியகோயில் என்றழைக்கப்படுவது பஞ்சபூதத்தலங்களுள் பூமித்தலமாகிய திருவாரூர் ஆகும். புலிக்கால் முனிவரும், பாம்புகால் முனிவரும் திருமூலட்டானம் என்று அழைக்கப்படுவதும், பூங்கோயில் என்று அழைக்கப்டுவதும். தோன்றிய காலமே அறிய முடியாத காலப்பழமையும் கொண்டதும், பிறந்தாலும் பெயர் சொன்னாலும் முக்திதரக்கூடிய பெருமையைக் கொண்டதுமாகிய திருவாரூர் பெருங்கோயிலில் மெய்யெலாம் நீரு பூசி, பொய்யில்லாத்தன்மையில் தன்னை நேசிப்பவர்களுக்கு இந்த பிரபஞ்சத்தையே வழங்கக் கூடிய மூர்த்தியாகிய அருள்மிகு தியாகராஜப் பெருமானின் திருவாரூர் கூத்தினைக் காண உள்ளம் விரும்பி தில்லை நீங்கி திருவாரூர் வந்தனர்.

திருவாரூரில் ஈசன் பார்வதி கந்தபெருமானுடன் சோமாஸ் கந்த வடிவம்தாங்கி இருந்தபடியே அசைந்தாடும் அழகு “அஜபா நடனம்” என்று அழைக்கப்படுகின்றது. அஜபா என்றால் ஜபிக்கப் படாதது என்றும் சொல்லப்படாதது என்றும் பொருள் தில்லை ரகசியம் போல் திருவாரூரில் ரகசியம் என்பது அருள்மிகு தியாகராஜசுவாமியின் திருமேனியாகும். ஸ்ரீசக்கரத்தையே மார்பில் கொண்ட தியாகராஜசுவாமியின் திருமேனியானது காண முடியாதது. முகம் மட்டுமே தரிசனம் என்பதால் இது

திருவாரூர் ரகசியம் என்றழைக்கப்படுகின்றது. மஹாவிஷ்ணுவின் மூச்சுக்காற்று, ஆதி சேஷனின் மூச்சுக்காற்று அனந்த

சயனப்பெருமாள்பள்ளி கொண்ட பாற்கடல் அலைகள் இவை மூன்றின் அசைவினாலும் தியாகராஜப்பெருமான் ஆடுவதாகவும் மஹாவிஷ்ணுவின் மூச்சுக்காற்றில் ஆடுவதால் அஜபா நடனம் என்றும் அழைக்கப்படும் திருவாரூர் கூத்தினைக் கண்டு வருடத்தில் இரண்டுமுறை (மார்கழித் திருவாதிரை, பங்குனி உத்திரம்) பாததரிசனம் காணவும் பதஞ்சலி முனிவரும் வியாக்கிரபுரீஸ்வரரும்,இரண்யவர்மனும் திருநீலகண்டேஸ்வரரும் திருவாரூர் வந்தனர். அந்நாளில் அரவிந்தனை ஆலாலசுந்தரனை நெஞ்சம்மறக்காமல் அருவாய், உருவாய் உலகுய்யவந்த உத்தமனை லிங்கவடிவமாய் விளமலில் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தனர். அதுவே அருள்மிகு பதஞ்சலி மனோகரர் திருக்கோயில் என அழைக்கப்படும் ஆலயமாய் மலர்ந்து வளர்ந்தது.

தேவாரத் திருத்தலங்களில் 207வது தலமாகிய இத்திருக்கோயிலை ஆளுடையபிள்ளையும் காழிச்செம்பொன்னுமாகிய திருஞானசம்பந்தர் பாடிப் போந்துள்ளார். திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமித் திருக்கோயிலில் உபகோயிலான இத்திருக்கோயிலிருந்து பதஞ்சலி வியாக்கிரபுரீஸ்வரர் ஆகிய இரு முனிவர்களும் மார்கழித் திருவாதிரை அன்றும் பங்குனி உத்திரத் திருநாளிலும் செம்பவளத் திருமேனியான் செங்கழுநீர்மாலையான் செல்வத்தியாகேசப் பெருமானின் திருவருட்பாத தரிசனம் காணவரும் நாட்கள் சிறப்பு உற்சவ நாட்களாகும்.

திருப்பணியும், திருக்குடமுழுக்கும் :

ஈட்டுகின்ற பொருளில் ஒரு பகுதியை வழிகாட்டுகின்ற இறைவனுக்கு என அர்ப்பணித்த செட்டிநாட்டுப் பெருமக்களால் 150 ஆண்டுகளுக்கு முன் திருப்பணி செய்யப்பட்டு ஏனோ பாதியில் விடப்பட்டிருந்தது. ஒளிகிளர் வெள்ளம்போல் இன்று உவந்து வந்த கிராமத்தினர் சார்பாகவும், சென்னை சிவார்ப்பணம் அறக்கட்டளை மற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் மூலமும் ரூ. 10 லட்சம் மதிப்பில் திருப்பணி முடிக்கப்பெற்று 30-08-2004 திங்கட்கிழமை காலை விண்ணிழிந்து மழையும் வாழ்த்த மண் தவழ்ந்த மக்கள் பெருவெள்ளம் ஓம் கார ஒலியெழுப்ப குடமுழுக்குப் பெருவிழா இனிது நடந்தேறியது.

திருவாரூர் வருவோர்... திருவளமல் வருக...!

அருள்மிகு பழநியாண்டவர் திருக்கோயில், கீழவீதி, திருவாரூர்.

குன்றிருக்கும் இடமெல்லாம் குமரனிருப்பான் என்பது முதுமொழி மலைகளே இல்லாத தஞ்சை மாவட்டத்திலும் சோழப்பேரரசர்கள் கருங்கற்களைக் கொண்டுவந்து கட்டுமலைக்கோயில்களாக எழுப்பி இறைவனுக்குத் தங்களின் நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர். அப்படி குமரக்கடவுளுக்கு எழுப்பப்பட்ட குன்றுமலைதான் அப்பனுக்கே பாடம் சொன்ன சுவாமிமலை திருக்கோயிலாகும். திருவாரூரின் சுவாமிமலை என்று அழைக்கப்படுவது திருவாரூர் கீழவீதியில் ஆழித்தேர் அருகில் அமைந்துள்ள அருள்மிகு பழநியாண்டவர் திருக்கோயிலாகும்.

இத்திருக்கோயில் திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயிலின் குழு ஆலயங்களில் ஒன்றாகும். குன்றில் இருந்து அன்பர்கள் குறை தீர்க்கும் முருகன், திருவாரூர் தியாகராஜபெருமானின் ஆழித்தேர் அருகில் தேரோடும் வீதியில் நவவீரர்களை ஒன்பது படிக்கட்டுகளாகக் கொண்ட கட்டு மலை மீது இருந்து அருள்பாலிக்கிறார்.


அருள்மிகு பழநியாண்டவருக்கு தங்ககவச திருப்பணிக்காக உண்டியல் நிறுவப்பட்டு காணிக்கைகள் பெறப்பட்டு வருகிறது.

கார்த்திகை, வைகாசி விசாகம், தைப்பூசம், கந்த சஷ்ட்டி திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகிறது.

தைப்பூசத் தினத்தன்று பக்தர்கள் பால் காவடி எடுத்து அரோகரா என விண்ணதிர ஆடிவரும் காட்சி கண்கொள்ளக் காட்சி ஆகும். பிரதி மாத கார்த்திகைத்தினத்தில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பழநியாண்டவரின் அருளை வேண்டிப்பிரார்த்தித்து பலன் பெற்று வருகின்றனர்.

திருவிழாக்கள் :

கார்த்திகை, வைகாசி விசாகம், கந்த சஷ்ட்டி, தைப்பூசம்.



அருள்மிகு திரிநேத்திரநாத சுவாமி திருக்கோயில், திருப்பள்ளிமுக்கூடல் (குருவி இராமேஸ்வரம்).

பழைய சிவத்தலமஞ்சரிநூலில் இத்தலத்தின் பெயர். அரியான் பள்ளி என்று குறிக்கப்பட்டுள்ளது. இன்று அப்பெயர் மாறி **திருப்பள்ளி முக்கூடல்** என்றே வழங்கப்படுகிறது. இதனை **குருவி ராமேஸ்வரம்** என்றும் அழைக்கின்றனர்.**இறைவன் :** திரிநேத்ர சுவாமி **இறைவி :** அஞ்சனாட்சி, மைம்மேவு கண்ணி **தீர்த்தம் :** முக்கூடல்தீர்த்தம், கோயில் எதிரில் உள்ளது.

இத்திருக்கோயில் அப்பரால் பாடல் பெற்றது. ஜடாயு இறைவனை நோக்கித் தவம் செய்து, தனக்கு இறுதி எப்போது என்று கேட்க இறைவன் அவரைப் பார்த்தது இராவணன் சீதையை எடுத்து வரும் நேரத்தில் நீ தடுப்பாய் அப்போது அவன் உள் சிறகுகளை வெட்ட நீ வீழ்ந்து இறப்பாய் என்றாராம். அது கேட்ட ஜடாயு பெருமானே! அப்படியானால் நான் காசி, கங்கை, இராமேஸ்வரம், சேது முதலிய தீர்த்தங்களில்மூழ்கித் தீர்த்தப் பலனை அடைய முடியாமற்போகுமே என் செய்வேன் என்று வேண்ட இறைவன் முக்கூடல் தீர்த்தத்தை உண்டாக்கி அதில் மூழ்குமாறு பணிக்க அவரும் அவ்வாறே மூழ்கிப் பலனைப் பெற்றாராம்.இதனால் இத்தீர்த்தம் திரிவேணி சாங்கமத்திற்கு நிகராகவும், இதில் மூழ்குவோருக்குபே பதினாறு மடங்கு தீர்த்த விஷேச பலனைத் தருவதால் இத்தீர்த்தம் **குருவிராமேஸ்வரம், ஷோடசசேது** என்றும் வழங்கப்படுகிறது.

திருவாரூர் தலமானது காசி என்றும் திருவாரூரிலிருந்து திருப்பள்ளிமுக்கூடல் செல்லும் வழியில் அமைந்துந்துள்ள கேக்கரை எனும் தலம் கயா என்றும் திருப்பள்ளி முக்கூடல் குருவி இராமேஸ்வரம் என்றும் போற்றப்படுகிறது. மூன்று மைல் தூரத்திற்குள் இவ்வாறு காசி -கயா-இராமேஸ்வரம் ஆகிய திருத்தலங்களின் பெருமைகளை கொண்ட தலங்கள் அமைந்துள்ளது திருவாரூருக்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது. இத்திருக்கோயில் திருவாரூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலின் உபகோயிலாகும்.

"ஆராத இன்னமுதை அம்மான் தன்னை
அயனொடும் மால் அறியாத ஆதியானை
தாராரும் மலர்க் கொன்றைச் சடையான் தன்னைச்
சங்கரனைத் தன்னொப்பார் இல்லான் தன்னை
நீரானை காற்றானை தீயானானை
நீள் விசும்பாய் ஆழ்கடல்கள் ஏழும் சூழந்த
பாரானை பள்ளியின் முக்கூடல்லானைப்
பயிலாதே பாழே நான் உழன்றவாறே"

- அப்பர்.

அருள்மிகு பரவைநாச்சியார் திருக்கோயில், திருவாரூர்.

எம்பெருமான், ஏகநாயகன் திருவாரூர் தியாகேசனின் லீலைகள் 365 என்பர். தன்னைச்சரணடைந்தார்க்கு தன்னையே தந்தருளும் எல்லையிலாப்பரம்பொருள் சுந்தரருக்காக பரவைநாச்சியாரின் இல்லத்திற்கு தியாகேசத்திருவுருவம் தாங்கி மஹாவிஷ்ணு காணமுடியாத தனது திருப்பாதங்களையும், பிரம்மாவால் காணமுடியாத சிரசினையும் பரவை நாச்சியாரின் இல்லம் தரிசிக்கும் வண்ணம் தனது அடியாருக்காக தூதுபோனதால் "அடிமுடிநேடிய திருவீதி" எனவும் திருவாரூர் அழைக்கப்படுகிறது.


பரவைநாச்சியார் பிறந்த இல்லமே தற்போது அருள்மிகு பரவைநாச்சியார் திருக்கோயில் என அழைக்கப்படுகிறது.

திருவாரூர் திருத்தலத்தில் தான் ஒரு நாயன்மார் வாழ்ந்த வீடு கோயிலாக மாறி இன்றளவும் வணங்கப்பட்டு வருகிறது. தெற்கு கோபுரத்தின் அருகில் திருமஞ்சனவீதியில் பரவைநாச்சியாருடன் சுந்தரர் சேர்ந்து வாழ்ந்த இல்லம் பரவையார் திருமாளிகை என்றும் இன்றளவும் அழைக்கப்படுகின்ற அருள்மிகு பரவைநாச்சியார் உடனுறையும் அருள்மிகு சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கோயில் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலின் உபகோயிலாக அமைந்து விளங்குகிறது.

ஆண்டுதோறும் ஆடி சுவாதியின் போது சுந்தரருக்கு விழாவும், அருள்மிகு தியாராஜ சுவாமி திருக்கோயிலின் பங்குனி உற்சவ பெருவிழா பெரியகொடியேற்றத்திற்கு முதல்நாள் குண்டையூரிலிருந்து இறைவன் வழங்கிய நெல்லை, அருள்மிகு பரவைநாச்சியார் திருக்கோயிலுக்கு, பூதங்கள் கொண்டுவரும் நிகழ்ச்சியும் இன்றளவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

"நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
தள்ளாக் காதற் தணித்தற்கம்ம
பரவை வாய்தனில் பதமலர்சேர்ப்ப
ஒருகாலல்லது இருகால் நடந்தும்
எளியரின் எளியராயினர் போலும்
அன்பர்தமக்கே"

– குமரகுருபரர்.



திருக்கோயில் மற்றும்
கமலாலய திருக்குளத்தின் ஒருங்கிணைந்த தோற்றம்



சுந்தரர் - பரவையார் - சங்கிலியார்

ஸ்ரீ மூகாம்பிகா ஆப்செட், திருவாரூர். 222009


அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில் தெப்பத்திருவிழா

திருவாரூர் வருக! திருவருள் பெறுக!

திருவாரூர் ஆழித்தேர்



ஸ்ரீ மூகாம்பிகா ஆப்செ
திருவாரூர். 2220